விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 மாசி 14 ஜ அவ்வல் 1 இதழ் 14

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 26—2—82

# மாநகரசபைக் கூட்டத்தில் அமளிதுமளி!

## யாழ். மாநகரசபை கிராமியமட்டத்துக்கு சென்று கொண்டிருக்கிறதாம்

(ஏ. வி. மாணிக்கம்)

யாழ்.மாநகரசபைக் கூட்டம் நேற்றுப் பிற்பகல் 3 மணிக்குக் கூடியபோது தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த அங்கத்தவர்களிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது. சபை முதல்வர் பல தடவைகள் அமைதியை நிலைநாட்ட முயன்றும் அங்கத்தவர்கள் உரத்த தொனியில் பேசிக் கொண்டிருந்தனர். சில கட்டங்களில் ஏகோபித்தும், ஒருவரைப் பார்த்து ஒருவர் கண்டித்தும் உரை நிகழ்த்திக் கொண்டிருந்தனர்.

(8ம் பக்கம் பார்க்க)

★ முகமூடி இளைஞர்கள் கைவரிசை!

# ரயில்நிலையத்தில் மற்றுமொரு கொள்ளை!

## மட்டக்களப்பு மாவட்டத்தில்

### முதலாவது சம்பவம்

(நமது நிருபர் இரா. உதயகுமார்

வாழைச்சேனை புகையிரத நிலையத்தில் நேற்றுமுன்தினமிரவு முகமூடி அணிந்த இளைஞர் கோஷ்டியினரால் ஆயுதமுனையில், 35,000 ரூபா கொள்ளையடிக்கப்பட்டுள்ளது! புகையிரத நிலைய உதவி அதிபரின் 3000 ரூபா பெறுமதியானதங்கமோதிரத்தையும், அக்கோஷ்டியினர் கழற்றிச் சென்றுள்ளனர்!

வாழைச்சேனை புகையிரத நிலையத்திற்கு புதன்கிழமை இரவு சுமார் 10.15 மணியளவில் 4 இளைஞர்களைக்கொண்ட கோஷ்டியொன்று முகமூடி அணிந்துசென்று அங்குகடமையாற்றிக்கொண்டிருந்த உப அதிபர் திரு. சுமதபாலாவிடம் கத்தியைக் காட்டி பயமுறுத்தி அவர் அணிந்திருந்த சுமார் 3000 ரூபா பெறுமதியுள்ள ஒன்றரை தங்கப்பவுண் மோதிரத்தைக் கழற்றிச் சென்றனராம்.

அச்சமயம், மற்றும் இரு ஊழியர் அங்கு கடமையாற்றிக்கொண்டி நந்ததாகக் கூறப்படுகிறது.

பணம் வைக்கப்பட்டிருந்த மேசைலாச்சி பூட்டப்பட்டிருந்ததால், கத்தி முனையில் உதவிஅதிபர் திரு. சுமதபாலாவை பணயம்வைத்து, மற்றும் ஊழியரை, புகையிரத நிலைய அதிபரின் விடுதிக்கு கத்திமுனையில் அழைத்துச் சென்றனராம்.

200 யார் தூரத்திலுள்ள விடுதிக்குச்சென்று பிரதம அதிபர் திரு. நாகலிங்கம் ரத்தினத்தை எழுப்பி, வந்து லாச்சியைத்திறந்து, அங்கிருந்த 35,000 ரூபாவையும் கொள்ளையடித்தனராம்.

சம்பவம் நடைபெற்ற சமயம், சகல தொலைபேசிவயர்களும்துண்டிக்கப்பட்டிருந்தனவாம்.

வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். பிரான்சிஸ் தலைமையி

(8ம் பக்கம் பார்க்க)

# இவர்களுக்கும் நஷ்டஈடு கிடைக்கும்

(இ. கந்தசாமி)

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் நடைபெற்ற வன்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படுவதுபோல், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் அதே காலத்தில் இடம்பெற்ற வன்செயல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமென்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் விடுத்த கோரிக்கையை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

யாழ். நகர வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களை விசாரணைசெய்து நஷ்டஈடுகள் பற்றிச் சிபார்சுசெய்த திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையிலான குழுவே இந்த விசாரணைகளையும் நடத்தும். அதற்கென இக்குழுவின் அதிகாரங்கள் விஸ்தரிக்கப்படவிருக்கிறது.

நேற்றுமுன்தினம் அரசாங்கத்துக்கும், தமிழர் விடுதலைக் கூட்டணிக்குமிடையே நடைபெற்ற உயர்மட்டப் பேச்சுவார்த்தைகளில் மேற்படி கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது, (இ)

# சன்சோனி சிபார்சுமீதும் நஷ்டஈடுகிடைக்கும்

## உபகுழு நியமிக்க தீர்மானம்

(கொழும்பு)

சன்சோனிக் கமிஷன் சிபாரிசுக்கமைய 1977ம் ஆண்டு இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நஷ்டஈடு வழங்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

நஷ்ட ஈடுகள் பற்றி மதிப்பீடுசெய்ய ஒரு குழுவை நியமிக்கவும் அமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1977ம் ஆண்டு நாடு முழுவதும் ஏற்பட்ட கலவரங்கள் பற்றி ஓய்வுபெற்ற நீதியரசர் திரு சன்சோனி விசாரணைகள் நடத்தி, ஜனாதிபதியிடம் சமர்ப்பித்த அறிக்கையில் அக்கலவரங்களில் பாதிப்புற்ற மக்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டுமெனச் சிபாரிசுசெய்திருந்தார். ஆனால் நஷ்டஈடு வழங்குவதா இல்லையா என்பது பற்றி அரசதரப்பில் பல மாதிரியான கருத்துக்கள் நிலவுவதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன.

நேற்று முன்தினம் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் இது பற்றி ஆலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டது. (இ)

# எடின்பரோ கோமகன் அடுத்தவாரம் வருகிறார்

(கொழும்பு)

பிரிட்டிஷ் எடின்பரோ கோமகன் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு விஜயம்செய்யவுள்ளார்.

இவர் இங்கு நான்கு நாட்கள் தங்கியிருப்பார்.

பிரிட்டிஷ் கோமன் இங்கு தங்கியிருக்கும் காலங்களில் வில்பத்து வனவிலங்குப்பகுதி, தெகிவளை மிருகக்காட்சிசாலை ஆகியவற்றிற்கு விஜயம்செய்வதுடன், வனவிலங்குகளின் புகைப்படக் கண்காட்சியையும், யானைகளைப் பாதுகாப்பதற்கான நிதிப்பிரிவையும் ஆரம்பித்துவைப்பார்.

எடின்பரோ கோமகன் உலக வனபரிபாலன பாதுகாப்புப் பிரிவின் தலைவராகவுமிருந்து வருகிறார். (வெ)

சிமெந்து தொழிற்சாலையில்

# மற்றுமொரு இளைஞர் விழுந்து மரணம்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை மூன்றும் கட்ட வேலைத்தளத்தில் மற்றுமொரு உயிர்ப்பலி நிகழ்ந்துள்ளது.

மாவிட்டபுரம் கொல்லங் கலட்டியைச் சேர்ந்த வல்லிபுரம் பஞ்சலிங்கம் (22வயது) எனும் இளைஞர் நேற்று முன்தினம் பகல் சுமார் 2.45 மணியளவில் 38 அடி உயரத்திலிருந்து கீழே விழுந்து தலையில் கம்பி குத்தப்பட்ட நிலையில் மயக்கமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

சிமெந்துத் தொழிற்சாலை மூன்றும் கட்ட வேலைத்தளத்தில் தொடர்ச் சங்கிலிபோல்

(8-ம் பக்கம்பார்க்க)

# துப்பாக்கி கைப்பற்றப்பட்டது

[யாழ்ப்பாணம்]

ஒட்டுசுட்டான், புதுக்குடியிருப்பிலுள்ள ஒரு வீட்டிலிருந்து ஒரு துப்பாக்கியும் சில

(8ம் பக்கம் பார்க்க)

★ ஆபிரிக்கா, பங்களாதேஷுக்கு ஆனையிறவு உப்பு:

# காங்கேசன்துறை வரும் மூன்று கப்பல்கள்

## ஐநூறு தொழிலாளருக்கு வேலைவாய்ப்பு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை துறைமுகத்திற்கு அடுத்தமாத ஆரம்பத்தில் மூன்று கப்பல்கள் வர இருக்கின்றன. இரு கப்பல்களில் உப்பு ஏற்றுமதி செய்யப்படும். ஒரு கப்பலில் நிலக்கரி இறக்குமதி செய்யப்படும்.

''எம். வி. ஜெற்பூர் வைஸ்ரேய்'' என்ற சிங்கப்பூர் கப்பல் மூவாயிரம் தொன் உப்பை ஏற்றிச் செல்வதற்காக மார்ச் மாதம் முதல் வாரத்தில் வருகின்றது. இக்கப்பலில் சுமார் அறுபதினாயிரம் மூடைகள் ஏற்றுமதி செய்யப்படும் இந்த உப்பு பங்களாதேசில் உள்ள சிட்டகாங்துறைமுகத்திற்கு ஏற்றுமதி செய்யப்படும்.

''எம். வி. ஜெற்பூர் முஸாபா'' என்ற மற்றோர் சிங்கப்பூர் கப்பல் நாலாயிரம் தொன் அரைத்த உப்பை ஏற்றிக் கொண்டு ஆபிரிக்காவில் உள்ள மொம்பாசா துறைமுகத்திற்குச் செல்வதற்காக மார்ச் மாதம் இருபத்தைந்தாம் திகதி காங்கேசன்துறை வந்து சேர விருக்கின்றது.

சிமெந்து கூட்டுத்தாபனத்தின் காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை நிலக்கரியில் செயல்பட இருப்பதால் சுமார் நாலாயிரம் தொன் இந்திய நிலக்கரியை ஏற்றிக் கொண்டு வரும் கப்பல் மார்ச் மாதம் பன்னிரண்டாம் திகதி காங்கேசன்துறைவந்துசேரும். இக்கப்பல்களின் வருகையால் சுமார் ஐநூறு தொழிலாளர்கள் வேலைவாய்ப்பை பெறுவர். அத்துடன் சுமார் ஐம்பது லொறிகளும் முப்பது வத்தைகளும் இறக்குமதி ஏற்றுமதி வேலைகளில் ஈடுபடுத்தப்படும். மூன்று கப்பல்களிலிருந்தும் இறக்குமதி ஏற்றுமதி வேலைகளை கப்பல் ஏஜென்சி நிறுவனமான கே. ஜெயபாலசிங்கம் கம்பனியார் பொறுப்பேற்றுள்ளனர். இதற்கிடையே சுமார் பத்து லட்சம் ரூபாய் பெறுமதியான மூவாயிரம் தொன் உப்பு

(8-ம் பக்கம்பார்க்க)

**மணிவாக்கு**

பிறரைத் துன்புறுத்தித் தாமே வாழ
விரும்புபவர்கள் கடையாயர்;
பிறரும் வாழ்க நாமும் வாழ்வோம்
என்றிருப்பவர்கள் இடையாயவர்;
தம்மை அழித்துக்கொண்டாயினும்
பிறரை வாழ்விக்க முயல்பவர்கள் தலையாயவர்கள்.

— டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன்

# நமது நோக்கு

## வரட்சியின் கொடுமை

நாட்டின் 24 மாவட்டங்களில் 17 மாவட்டங்கள் கடும் வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன.

வரட்சி நிவாரணம்பற்றி அமைச்சரவை அவசிய நடவடிக்கைகள் பற்றி திர்மானங்கள் எடுத்தபோதும் மக்களின் அன்றாட வாழ்வுக்கு இந்தத்திர்மானங்கள் செயலில் மொழிபெயர்க்கப்பட்டதாக எதுவும் தெரியவில்லை.

கண்டியிலும் கொழும்பிலும் நடைபெற்ற கிரிக்கட் போட்டிகள் பற்றிய படங்களும் பிரசாரங்களும்செய்திகளும் பிரமாண்டமாகப் பிரசுரித்த கொழும்புத்தினசரிகள், பொதுமக்களைப் பீடித்திருக்கும் இந்தப்பட்டினி நிலை பற்றி போதியளவுசெய்திகள் வெளியிடவில்லை.

'கண்டதேகாட்சிகொண்டதே கோலம்' என்பதே இக்காலத்தின்மணிவாக்குப் போலிருக்கின்றது. இந்த மனப்போக்கு உச்சியின்று உள்ளங்கால்வரையும் ஊற வெடுப்பதற்கு அரசாங்கமே முன்மாதிரியாக அமைகின்றது.

குறிப்பிட்ட செய்திகளில் மிக அவலமானது வடமத்திய மாகாண மாணவர்களின் பரிதாப நிலையைப் பற்றியது.

வரட்சியால் தாக்குண்ட வடமத்தியமாகாணமாவட்டங்களில் பாடசாலை மாணவர்கள் நாளுக்கு ஒருநேர மாவது சோறு சாப்பிட முடியாது தவிக்கின்றனர். இது காரணமாகப்பாடசாலைகளில் முழு நேரப்படிப்பின்றி மாணவர்கள் வீடு திரும்புகின்றனர். தினசரி நிலைமை மோசமடைகின்றது.

காலமழை உடனடியாகப் பெய்யாதிருந்தால் மகாவலி விளைச்சல் பாழாய்ப்போய்விடும். கலாவிவாப்பகுதியிலுள்ள விளைச்சல் நிலங்கள் மகாவலி நீரில் தங்கியிருப்பதால், அங்கு ஏற்படும் தண்ணீர் தட்டுப்பாடு அப்படியே முற்றாக அழித்து விடும்.

மகாவலி நீர் நிலை குறைந்துபோகும் நெருக்கடியில் தண்ணீரைச் சிக்கனமாக வழங்கும் திட்டம் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தப் பொறுப்புடைய நீர்வாக அதிகாரிகள், இதனால்அதிகமடையும் கமக்காரர்களின் மனோ நிலையைப் புரிவதில்லை.

அண்மையில் மகாவலி நீர்ப்பாசன வரிகளை நம்பியிருந்த 1000 விவசாயிகள் பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்; நூற்றுக்கணக்கில் மக்கள் கூட்டம் ஒன்றுகலால் வாயிலைத் துக்குப்போய் நீர்வழங்கப் படாவிட்டால் நீர்ச்சுவர் களை உடைத்து நீரைப் பாய்ச்சுவோம் என்று அச்சுறுத்தினர். பத்து லொறிநிறைந்த கமக்காரர்

கூட்டம் பிரதியமைச்சரின் வாசஸ்தலத்துக்குப் படையெடுத்தனர். கொழும்பு மாநகருக்கும் விவசாயிகள் குழாம் விஜயம் செய்யத் தவறவில்லை.

கொழும்பு வேறு; நாடு வேறு. கொழும்பில் கிரிக்கட் மைதானத்தைச் செப்பனிட்டு சிறு புல் வளர்க்க லட்சக்கணக்கானகலன் தண்ணீர் விரயப்படுத்தப்படுகிறது. பயிருக்கு மட்டுமல்ல, லட்சக்கணக்கிலான மக்கள் குடி தண்ணீருக்கு வழியின்றி அவதிப்படும் போது. இந்த ஆடம்பர வேலை நடைபெறுவதாயின் பிரஞ்சுபுரட்சிக்கான சூழ்நிலை இங்கும் உருவாகுதோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது.

பிரஞ்சுராணி மாரி அன்ரோயினற் (Marie Antoinette) உண்மையில் பாணே கிடைக்கவில்லையென்று முறைப்பட்ட பிரெஞ்சு மக்களுக்கு 'கேக்' சாப்பிடலாமே என்ற சம்பவம் நினைவுக்கு வருகின்றது.

ஆதிரமடைந்த மக்களின் நிலைமையறியாத அரசு கிரிக்கட் மைதானத்தில் இவ்வித பூவளர்க்கும் முயற்சியை ஒருவிரச்செயலெனநினைத்து ரூபாவாகினியில் மக்கள் பார்த்து மகிழ் வார்களென்றுகாண்பிக்கின்றது.

கொழும்பு மாநகரில் நடைபெற்ற கிரிக்கட் குதூகலத்துக்கும் வரட்சியின் கொடுமைதாங்க முடியாத மக்களின் குமுறலுக்கும் எட்டாத தூரம்; அரசுக்கும் மக்களுக்குமுள்ள தூரத்தை பிரதிபலிக்கின்றது.

அமைச்சரவையில் வரட்சி நிவாரணம் ஒரு சாதாரண விடயம் போல் கணிக்கப்பட்டது. நிபந்தனையின்றி குடும்பம் ஒன்றுக்கு குறிப்பிட்ட நிவாரண பணம் வழங்கப்பட்டால் பிரச்சினை தீர்ந்துவிடுமென மகிக்கொட்டை கட்டுவது தேர்தல் ஆண்டில் அபாயகரமானது.

அமைச்சர்கள், ஆளுங்கட்சி அங்கத்தவர்கள், அதிகாரிகள் அனைவரும் தத்தம் உலகில் — அதிகார கோட்டையில் — கவலையின்றி வாழ்கின்றனர். தங்கள் 'கையாட்கள்' காரியம் பார்ப்பார்களென்ற பழைய பாங்கு ஆளுங்கட்சியின் இன்றைய போக்காய் விட்டது.

கிராமப்புறமக்களை அவர்களின் துன்ப நிறைவேற்ற நேரடியாகச் சந்தித்து அவர்களின் இன்றைய வறுமை நிலையைப்போக்க உருப்படியான நடவடிக்கை களில் ஈடுபட எம்.பிமார் ஹிதமாகதொழிற்படாவிட்டால் பெருந்தீது முடிவுறுத்தப்போறதிருந்து பார்க்கவேண்டியதில்லை.

# மக்கள் கருத்து

## யாழ். நூலகம்

24ம் திகதிய 'ஈழநாடு' பத்திரிகை ஆசிரியர் தலையங்கம் யாழ்மக்கள் நூலகமின்மையால் எவ்வளவு பாதிப்படைந்திருக்கின்றார்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றது. ''நூலக வரவின் தாற்பரியம்'' என விளக்கியதை மாநகரசபையினர் நன்குணர்ந்துள்ளனர் என மக்கள் நினைக்கக்கூடிய வகையில் அவர்கள் நடவடிக்கையிருப்பது மிக அவசியம். பல்வேறிடங்களி லிருந்தும் நூல்கள் நன்கொடையாய்க் கிடைப்பதாய்ப் பத்திரிகைமூலம் அறிகிறோம். இந்நூல்கள் மக்கள், மாணவர்கள் கைக்கு எட்டவில்லையானால் அவை பிரயோசன மற்றவையாய் விடும். கட்டடத்திலும் பார்க்க மக்கள் பாவனைக்கு நூல்களை விடுதல் கூட முக்கியம். நூல்களுக்கு அகமேயொழிய (வீடு) அகத்திற்கு நூல்களல்ல

நேற்றைய பத்திரிகையில் கட்டிடத் திருத்த வேலைக்கும் புதிதாக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் கட்டிடத்திற்கான செலவு எவ்வளவு வரும் என அறிவித்திருந்தது. அத்தொகையைச் சேர்க்க பலகாலம் செல்லும் என்பதை எல்லாரும் உணர்வார்கள். ஆகையால் சேர்க்கும் பணம் தற்போதைய கட்டிடத் திருத்த வேலைக்கு முதல் பயன்படுத்த வேண்டும். திருத்திய பகுதியில் உடன் நூலகம் தொடங்கவேண்டும். இவ்வுறுதி மொழியை மாநகரசபை வழங்கி மக்களுக்கு நம்பிக்கையூட்டவேண்டும்.

ந. நடேசன்
ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

* * *

## பெண்களை இழிவுபடுத்தும் விளம்பரங்கள்

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் அருகே அமைந்திருக்கும் ''சலீனின் ரெட்ணம்'' நிறுவனத்தில் இம்மாதம் 15ம், 16ம் திகதிகளில் பெண்கள் ஆய்வு வட்டம் நடத்திய ''பெண்களை இழிவுபடுத்தும் விளம்பரங்கள்'' பற்றிய கண்டனக் கண்காட்சியொன்று நடைபெற்றது. வளர்ந்துவரும் வர்த்தக சமுதாயத்தில் சாதாரண பண்டங்கள் விலைபேசு வதுபோல் பெண்களையும் விலைபேசும்வண்ணம் அல்லது அவர்களின் அழகை ஆபாசப் பொருளாக்கி இழிவுபடுத்தும் வண்ணம் இவ்விளம்பரங்களில் பெண்கள் சித்தரிக்கப்படுவதை எதிர்த்து நடந்த ஒரு கண்டனக் கண்காட்சியாக இது அமைந்தது.

பெண்களின் அழகை வெறுமனே ஆபாசப் பொருளாக்கிக் காட்டும் விளம்பரங்களை பத்திரிகைகளிலும் மற்றும் சஞ்சிகைகளிலும் ஆங்காங்கே நாம் பார்த்திருக்கின்றோம். அவற்றைத் தனித்தனியே பார்க்கும்போது ஏதோ ஆபாசமான காட்சிகளாகத் தெரிகின்றன. அதன்மூலம் இந்தச் சமுதாயத்தில் உள்ளோரை தவறான வழிகளில் இட்டுச் செல்லும் விளம்பரங்களென்றே, பெண்களை இழிவுபடுத்துவன என்றே பெரிதாகச் சிந்திப்பதில்லை. ஆனால் பல்வேறுவகையான இவ்விளம்பரங்களை ஒருங்கே காணும்போது எம்மையறியாமலேயே மனதில் ஒரு உணர்ச்சி ஏற்படுகின்றது. அவ்வகை யில் இக்கண்காட்சி பெண்களை இழிவுபடுத்தும் இவ்விளம்பரங்களை எதிர்க்கவேண்டும் என்ற உணர்ச்சியையாவது ஏற்படுத்தியிருக்கும் என்று நிச்சயமாக நம்பலாம். எனவே இப்படியொரு கண்காட்சியை நடத்

# கம்பியூட்டரும் நேர்மையற்றதாய் மாறலாம்!

சாள்ஸ் பபேச் (CHARLES BABBAGE) என்னும் பிரித்தானியரை பிதாமகராகக் கொண்ட கம்பியூட்டர் மிக துரிதமாக வளர்ச்சியடைந்து, இன்று பலநாடுகளின் உயிர் நாடி என்று சொல்லும் அளவுக்கு உன்னதநிலையையடைந்துள்ளது.

சிலநாடுகளில் கம்பியூட்டர் என்றாலே, அந்நாட்டு மக்களுக்கு அது கசப்பான விடயம். இதற்கு முக்கிய காரணம் உலகில் சில பகுதிகளிலும் கம்பியூட்டரின் உபயோகத்தை சரியான முறையில் புரிந்து கொள்ளாமையே ஆகும். கம்பியூட்டர்கள் வேலையில்லாப் பிரச்சினையை உண்டாக்கும் என்று கூறப்படும் வதந்தியே காரணமாக பலர் இதனைக் கண்டு அஞ்சுகிறார்கள்.

மறைந்து கிடைக்கும் உண்மை என்னவெனில் கம்பியூட்டர்களை பாவிப்பதனுல் பெரும் தொகையானோருக்கு வேலைவாய்ப்பு கிடைப்பது மட்டுமல்லாது மக்கள் ஒரே தொழிலை செய்யாமல் புதிய புதிய தொழிலை பழகுவதற்கும் செய்வதற்கும் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. முன்பு கம்பியூட்டர்கள் வேலையில்லாப் பிரச்சினையை உண்டாக்கும் என்று கூறிய நாடுகளில் கூட, கம்பியூட்டர்களை பாவித்த பின் இந்த உண்மை உணரப்பட்டது.

— சு. வி. கிருபாகரன்

கம்பியூட்டர்கள் பல பல தேவைகளுக்கு ஏற்ப வெவ்வேறு விதங்களில் பாவிக்கப்படுகின்றன. நாம் விரும்பினால் ஒரு கம்பியூட்டருடன் பல வேலைகளையும் செய்யலாம். இவை யாவற்றிற்கும் முக்கிய காரணி கம்பியூட்டரின் உள் கொடுக்கப்படும் நிகழ்ச்சி நிரலே (Computer Program) ஆகும்.

இந்நிகழ்ச்சி நிரலை நாம் எமது தேவைக்கேற்ப மாற்றி கம்பியூட்டரை எமது தேவைக்கேற்ப இயங்கச்செய்யலாம். இந்நிகழ்ச்சி நிரலை தயாரிப்பவரே கம்பியூட்டர் நிகழ்ச்சி நிரலாளர் Computer Programmer) என அழைக்கப்படுவார்.

ஒரு கம்பியூட்டருக்கு நிகழ்ச்சி நிரலை தயாரிக்கும் நிகழ்ச்சி நிரலாளர் விரும்பினால்: அக் கம்பியூட்டருக்கு தாம் தயாரிக்கும் பிழையான நிகழ்ச்சி நிரலைக்கொண்டு அந்த கம்பியூட்டரை நேர்மையற்றது ஆக்கமுடியும் இதற்கு அண்மையில் நடைபெற்ற ஓர் சம்பவத்தை இங்கு உதாரணமாக தருகிறேன்.

அமெரிக்காவில் ஓர் வங்கிக்கு சேமிப்புப் பகுதிக்கு ஓர் கம்பியூட்டர் தேவைப்பட்டது. இக் கம்பியூட்டர் அங்கு பணம் சேமிப்போரின் பட்டியலை alphabetic Order ல் (A-Z) ஆங்கில எழுத்து வரிசையில் தயாரிக்கவேண்டும். பின்னர் கணக்காளர் பணம் செலுத்தினால் அல்லது பணம் எடுத்தால் அத்தொகையை அவர்களின் கணக்குகளில் குறிக்கவேண்டும். இதற்குரிய நிகழ்ச்சி நிரலை தயாரித்த நிகழ்ச்சி நிரலாளர் மேல் குறிப்பிட்ட நிகழ்ச்சிகளுடன் மேலும் ஒரு நிகழ்ச்சியை கூடுதலாக சேர்த்துவிட்டார். அது என்ன வெனில் A-Z யில் உள்ள கணக்காளரின் கணக்கில் ஏதும் மிகுதிப்பணமாக 5 சதத்துக்குக் குறைவாக உள்ள பணத்தை Zல் உள்ள கடைசிப்பெயருக்கு குறிக்கும்படியாக இந்த நிகழ்ச்சிநிரலை தயாரித்த அந்த நிகழ்ச்சிநிரலாளர் கம்பியூட்டரை அவ்வங்கிக்கு விற்றதும், அங்கு சென்று தனக்கு ஒரு பொய் பெயரை Zல் வைத்து ஒருகணக்கை ஆரம்பித்துவைத்தார். அவ்வளவுதான் இவரது கணக்கில் பெரும்தொகை பணம் சேரத் தொடங்கியது. இவ்விடயம் இவரை தவிர வேறுயாருக்கும், கம்பியூட்டர் ஸ்தாபனத்திற்குக் கூடதெரியாது.

ஒருநாள் அயர்லாந்தை சேர்ந்த வேறு ஒருவர் இதே வங்கியில் ஓர் சேமிப்பு கணக்கைத் தொடங்கினர். அவரது பெயரும் Zல் உள்ளது ஆகையால், அயர்லாந்து வாசியின் பெயர் நிகழ்ச்சி நிரலாளரின் பொய்ப் பெயருக்கு அடுத்ததாக கணக்காளர் பட்டியலில் இடம்பெற்றது. அன்று தொடக்கம் கம்பியூட்டர், 5சதத்துக்கு குறைவான் மற்றவர்களுடைய பணத்தை அயர்லாந்து வாசியின் கணக்கில் குறிக்க தொடங்கியது.

இதனால் அயர்லாந்து வாசியின் கணக்கில் பெரும் தொகையான பணம் அவரை அறியாது கூடியது. இதை அவதானித்த அவர் வங்கியுடன் தொடர்புகொண்டார். வங்கி பெரும் அதிர்ச்சியினால் செய்வதறியாது கம்பியூட்டர் ஸ்தாபனத்துடன் தொடர்புகொண்டது. கம்பியூட்டர் ஸ்தாபனம் சில சோதனைகளின் பின்னர் நிகழ்ச்சி நிரலாளரின் மோசடியை கண்டுபிடித்தது: கடைசியில் மோசடி குற்றத்தை ஒப்புக்கொண்ட நிகழ்ச்சிநிரலாளர் (Computer Programmer) சிறைக்கு அனுப்பப்பட்டார். ஆகையால் கம்பியூட்டர் நேர்மையானதாகவோ அல்லது நேர்மையற்றதாகவோ இயக்குவதற்கு அதற்கு கொடுக்கப்படும் நிகழ்ச்சி நிரலிலேயே (Program) தங்கியுள்ளது.

தும் பெண்கள் ஆய்வு வட்டத்திற்கு உண்மையில் நன்றி செலுத்துவதுடன் அவ்வட்டம் இத்தகைய முயற்சிகளில் மேன்மேலும் ஈடுபட ஆதரவும் வழங்கவேண்டும்.

இக்கண்காட்சியைப் பார்வையிட்ட விரிவுரையாளர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பலர் தமது கருத்துக்கள் பலவற்றையும் வெளியிட்டிருந்தனர். அக்கருத்துக்களை யாவற்றையும் நன்கு அலசி ஆராயும்வண்ணம் ஒரு கருத்தரங்கையும் நடத்தினால் இக்கண்காட்சியின் நோக்கத்தில் மேலும் வளர்ச்சி அடையலாம் என்றே தோன்றுகின்றது. அத்துடன் இதுபோன்ற கண்காட்சிகளை கிராமப்பகுதிகள், பொதுஜனமடங்கள் போன்ற இடங்களிலும் காட்டினால் மிகவும் நல்ல பயன் விளையுமென எதிர்பார்க்கலாம்.

இ. சூரியகுமாரி
சந்திரம்மடம்.

## சேவைக்கு பாராட்டு

[மண்டைதீவு]

மண்டைதீவு விவசாய முன்னேற்றக்கழக மாதாந்தக் கூட்டம் சுழகத் தலைவர் திரு. மு. நவரட்னராசா தலைமையில் நடைபெற்றபோது இப்பகுதி பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. சி. ஜெயசிங்கத்தின் சேவைபாராட்டப்பட்டது.

## விவசாயவிழா

(பச்சிலைப்பள்ளி)

பளை உதவி அரசாங்கஅதிபர் பிரிவிலுள்ள கோயில் வயல் கிராம அபிவிருத்திச் சங்கம் நடாத்தும் விவசாய விழா இன்று நடைபெறுகிறது.

விழாவில் பிரதம அதிதியாக பளை உதவி அரசாங்க அதிபர் திரு. சு. முருகவேள் கலந்து கொள்வார்.

# விசாரணையின்றித் தடுப்புக்காவல்!

## புதியசட்டத்தை எதிர்த்து எதிர்க்கட்சிகள் வெளிநடப்பு

புதுடில்லி, பெப். 25

இந்தியப் பாராளுமன்றத்தின் லோகசபையிலிருந்து எதிர்க்கட்சிகள் நேற்று வெளிநடப்புச் செய்தன.

தொழிற்சங்கவாதிகளை தடுப்புக்காவலில் வைத்திருப்பது தொடர்பான சட்டம் குறித்து விவாதிக்க அனுமதி மனு கோரப்பட்டதையடுத்தேஎதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்ததாக தெரிவிக்கப்பட்டது.

இச்சட்டத்தின்படி விசாரணையின்றி தடுப்புக்காவலில் எவரையும் வைத்திருக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (வெ)

## ஓடுபிரித்து திருட்டு

(யாழ்ப்பாணம்)

அராலி தெற்கில் உள்ள றதி அரிசிஆலையில் நள்ளிரவு நேரத்தில் ஓடுபிரித்துக் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஆலை குத்தகைக்காரர் காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்ததையடுத்து பொலிசார் புலன் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர். (கு)

## விவசாயிகளுக்கு சலுகை

(கொழும்பு)

வங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றில் கடன் பெற்ற விவசாயிகள் கடனை திரும்பச் செலுத்துவது தற்காலிகமாக அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதற்கான தீர்மானம் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

வரட்சி காரணமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (இ—வெ)

## ஆந்திரா முதல்வராக வெங்கட்ராம் தெரிவு

புதுடில்லி, பெப். 25

ஆந்திரா பிரதேச முதலமைச்சராக திரு. பி. வெங்கட்ராம் பதவியேற்றார். துணையமைச்சராக திரு. சி. ஜெகந்நாத்ராவ் பதவியேற்றார்.

ஆந்திரா பிரதேச முதலமைச்சர் திரு, ரி. அஞ்சையா அண்மையில் தமது பதவியை ராஜினாமாச் செய்திருந்தது தெரிந்ததே. [வெ]

## அனுராதபுரத்தில் பாரதி நூற்றாண்டு

(அனுராதபுரம்)

அனுராதபுரம் விவேகானந்த சபையின் ஆதரவில் விவேகானந்தா தமிழ் மகா

( 6ம் பக்கம் பார்க்க)

## 'ஆசியானில்' இலங்கை நிலை: சாதகமாக அமையும்?

கோலாலம்பூர், பெப். 25

ஆசியான் நாடுகளில் இலங்கை சேர விண்ணப்பித்தமை சாதகமாக அமையும் என்று எதிர்பார்ப்பதாக நிதியமைச்சர் திரு. ரொனி டிமெல் தெரிவித்துள்ளார்.

மலேசியாவில் விஜயம் மேற்கொண்டிருக்கும் திரு. ரொனி டி மெல் அந்நாட்டின் வெளிநாட்டமைச்சரையும் சந்தித்து கலந்துரையாடினார்.

திரு. ரொனி டி மெல் இன்று நாடு திரும்புகிறார். (வெ)

## கம்பாலாவில் சகஜ நிலை

கம்பாலா, பெப். 25

உகண்டாவின் தலைநகரான கம்பாலாவில் நேற்று இடம்பெற்ற இரத்தக்களரிக்கு பின்னர் இன்று நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

இங்குள்ள இராணுவ முகாமொன்றின் மீது 300 கெரில்லாக்கள் சிறுபீரங்கித் தாக்குதலொன்றை நடத்தியதாகவும், இத்தாக்குதலின் போது சிலர் கொல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது.

உகண்டா ஜனாதிபதி திரு. மில்டன் ஒபோட்டேயின் அரசாங்கத்தை வன்செயல்களின் மூலம் பதவியிழக்கச் செய்வதற்காகவே இவ் இரத்தக்களரி மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

உகண்டாவில் நிலைகொண்டிருந்த தன்சானியப்படைகள் இம்மாதமுற்பகுதியில் நாடு திரும்பியதாகவும் கூறப்பட்டது. (வெ)

## 11 கோடி ரூபா செலவில் தொழில்நுட்ப கல்வித்திட்டம்

(கொழும்பு)

தொழில்நுட்பக் கல்வியை அளிப்பதற்கான நாலாண்டு மூலதன திட்டமொன்றை 11 கோடி 60 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்வதென்று நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (இ—வெ)

## யாழ்-டா ஹோட்டல் கொலைவழக்கு:

# 'கிணற்றடியில் கிடந்தவரின் சிரசில் காயமிருந்தது'

### கான்ஸ்டபிள் சாட்சியம்

(யாழ்ப்பாணம்)

யாழ் டா ஹோட்டலுக்குப் பின்புறமாவுள்ள கிணற்றடியில் ஒருவர் அண்ணாந்தநிலையில் விழுந்துகிடந்தார். அவருடைய சிரசில் காயமிருந்தது. அவர் உடம்பைத்தொட்டுப் பார்த்தபொழுது அவர் இறந்துவிட்டது தெரிந்தது.

யாழ்டா ஹோட்டல்கொலை வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. ஜோகநாதன் முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டபோது பொலிஸ் கான்ஸ்டபிள் டேவிட் சாட்சியமளிக்கையில் மேற்கண்டவாறு உறினார்.

இவ்வழக்கில் 80 செப்டம்பர் 9ம் தேதி யாழ்டா ஹோட்டலில், நல்லூர் வீதியைச் சேர்ந்த மாப்பாணபிள்ளை கமலேந்திரன் என்பவரை மு. தம்பியையா, இ. ஞானசேகரம், வே. யோகராசா ஆகியோர் அடித்துக்கொலைசெய்ததாக குற்றம்சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ஜிம்மி ராஜரத்தினம், சட்டத்தரணி எ. அன்ரனி ஆகியோர் ஆஜராகினர்.

யாழ். பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் கே. ஸ்ரீதரன் சாட்சியங்களை நெறிப்படுத்தினர்.

பொலிஸ்காஸ்டபிள் டேவிட் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது.

சம்பவதினம்யாழ். பொலிஸ் நிலையத்தில் நான் கடமையாற்றினேன் பிற்பகல் 5.55 மணியளவில் கிடைத்ததகவலின் பிரகாரம், பிரதானவீதியிலுள்ள யாழ். டா ஹொட்டலுக்கு விசாரணைக்கு சென்றேன். அந்நேரத்தில் ஹோட்டல்கதவுதிறக்கப்பட்டிருந்தது அக்கதவினூடாக நான் உள்சென்று காசாளரிடம், ''குடித்துவிட்டு விழுந்துகிடப்பவர் எவ்விடத்தில் கிடக்கிறார் என்று கேட்டேன்.

நான் உட்சென்று பின்பக்கவிருந்தையில் பார்த்தபொழுது மேசை கதிரைகள் விழுந்துகிடந்ததைக் கண்டேன். அதன் பின்பு காம்பறைக்குப் பின்புறமாகவுள்ள அடுத்த காம்பறைக்குச் சென்றபொழுது இரத்தக்கறை இருந்தது. அத்துடன் வாந்தியெடுத்திருந்த அடையாளத்தையும் கண்டேன். அவ்விடத்தில் ஒரு விறகு கட்டையும் இருந்தது. அதற்குப் பின்புறமாக கிணற்றடிக்குக்கிட்டவாக ஒருவர் விழுந்து கிடந்ததை காசாளர் காட்டினார்.

அவர் அண்ணாந்த நிலையில் விழுந்து கிடந்தார். அவருடைய சிரசில் காயமிருந்தது. அவர் வெள்ளை கட்டைக்காற்சட்டை அணிந்தார். அதில் இரத்தக்கறை இருந்தது. நான் அவருடைய உடம்பைத் தொட்டுப்பார்த்தபொழுது அவர் இறந்துவிட்டதை அவதானித்தேன். இவ்விபரங்களை எனது மேலதிகாரியாகிய இன்ஸ்பெக்டர் பிரேமதாசாவுக்கு கூறினேன். அவர் பின் ஸ்தலத்திற்குவந்து விசாரணையை ஆரம்பித்தார்.

சட்டத்தரணி திரு. ஜிம்மி ராஜரத்தினம் குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:

நான்ஸ்தலத்துக்கு தனியாகச் சென்றேன். அருளானந்தம் விழுந்துகிடந்தவருக்கு காயம்எப்படிஏற்பட்டதென்று கூறவில்லை. நான்யாழ்டாகோட்டலுக்கு சென்றபோது அங்கு அருளானந்தமும் ஹோட்டலில் கடமையாற்றுவோரும் மாத்திரம் நின்றார்கள். வேறு எவருமில்லை. அன்று பொலிகாருக்கு கிடைத்த தகவலில் யாழ்டா ஹோட்டலில் அன்ரன் என்பவர் குழப்பம் விளைவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தரணி ஏ. அன்ரனி குறுக்கு விசாரணை செய்கையில் சாட்சி கூறியதாவது:

நான் ஸ்தலத்துக்கு சென்றபொழுது அங்கு நின்றவர்கள் எவராவது இச்சம்பவம் பற்றி எதுவும் கூறவில்லை.

''நான் ஸ்தலத்துக்கு சென்றபொழுது அங்குள்ளவர்கள் இடங்களைக் காட்டினார்கள். நான் அவர்களை விசாரித்தேன். குழப்பம் நடந்ததை மட்டும்தான் கூறினார்கள்.

நான் ஸ்தலத்துக்குச் சென்றது ஒருநபர் விழுந்து கிடப்பதை அவரை வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லவுமே சென்றேன் விசாரணைக்கு செல்லவில்லை. இக்கொலை சம்பந்தமான விசாரணையைநடத்தவில்லை.

இது சம்பந்தமான முழு விசாரணையும் உப பொலிஸ் இன்ஸ்பெடர் பிரேமதாசா தான் நடாத்தினார்.

இவ்வழக்கு மேல்விசாரணை மார்ச் 15ம் திகதி ஒத்திவைக்கப்பட்டது. (மா)

## டாக்டர் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை பூநகரி உப அலுவலக ஆயுர்வேத இலவச வைத்திய சாலையில் கடமையாற்றிய டாக்டர் கே. பி. சண்முகரத்தினம் யாழ். மாநகரசபை இலவச வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் இவரின் பூநகரி இடத்துக்கு டாக்டர் என். சண்முகநாதன் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (மா)

## தமிழ்க்காப்பிய போட்டி

# இலங்கைக் கவிஞர்களும் பங்குபற்றலாம்

(யாழ்ப்பாணம்)

தமிழ், சமஸ்கிருதம் மற்றும் இந்திய மொழிகள் பற்றிய ஆராய்ச்சி நிறுவனம் (தமிழ்ச் சுரங்கம்) தமிழ் கவிஞர்களிடையே சாப்பியப்போட்டிஒன்றினை நடத்தவிருக்கின்றது. தமிழ்மொழி வரலாற்றில் நல்லதொரு புதுக்காப்பியம் தோன்றவேண்டுமென்றநோக்கத்துடன் நடத்தப்படவிருக்கும் இக்காப்பியப்போட்டியில் இலங்கைக் கவிஞர்களும் தமது படைப்புக்களை அனுப்பிப் போட்டியில் கலந்துகொள்ளுமாறு வேண்டப்பட்டுள்ளனர். தமிழ்ச்சுரங்கத்தின் இயக்குநரான டாக்டர் ஆறு அழகப்பனே இப்போட்டிக்கும் பொறுப்பாளராகவிருக்கின்றார்.

ஐயாயிரம் ரூபாய் பரிசினைக் கொண்ட இப்போட்டிக்கான ஆக்கங்களை இவ்வருடம் டிசம்பர் மாத இறுதிக்குள் அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக டாக்டர் ஆறு அழகப்பன் விடுத்துள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

''சிலம்பு, மணிமேகலை ஆகிய இரு காப்பியங்கள் மட்டுமே தமிழ்நாட்டு வரலாறு தழுவியன. சிலப்பதிகாரத்தின் கதையிலிருந்து தோன்றிய காப்பியமே மணிமேகலை. இந்நெறியில் மணிமேகலையிலிருந்தும் மற்றொரு காப்பியம் உருவாக இடம் இருக்கிறது. கவிஞர்களின் விருந்தாகவும், தமிழ் மொழிக்கு ஆக்கமாகவும், புதியதொரு காப்பியம் உருவாக மணிமேகலைக் காப்பியம இடம் தருகின்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை அனைய மூன்றாவது காப்பியம்ஒன்றினை உருவாக்கித்தரும் கவிஞருக்கு ரூபாய் ஐயாயிரம் அரங்கேற்ற விழாவின்போது வழங்கப்படும். போட்டியில் பல நாட்டுக் கவிஞர்களும் பங்கு பெறலாம். பரிசுக்குரிய காப்பியம் தேர்ந்தெடுப்பதற்குத் தலைசிறந்த தமிழினத் தலைவர்களும், தமிழறிஞர்களும் இசைந்துள்ளனர்.

காப்பியம் 1982 டிசம்பர் இறுதிக்குள் கிடைத்தல்வேண்டும். காப்பியப் போட்டிக்கான விதிமுறைகள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

காப்பியம் ஏறக்குறைய சிலப்பதிகார அளவில், மரபு வழிக் கவிதையாப்பு கையாளப்பெறுதல் வேண்டும். அரசியல், கட்சிகள், மறுப்புக்குரிய கருத்துக்கள், அரசியல் தலைவர்கள் பெயர் சூட்டல் முதலியனவருதல் கூடாது. புதியஉவமைகள் உருவகங்கள், கற்பனைகள், வருணனைகள் முதலியனஇடம் பெறல் வேண்டும். தமிழ்ப் பண்பாடு தழுவுதல்வேண்டும். பாத்திரங்கள் பெருங்கதை போல மிகப்பலவாக இருத்தலாகாது. காப்பியம்பழங்கதையைத் தழுவியமைதலால் சொல்லாட்சியில்கவனம்வேண்டும். ஒரேபக்கத்தில் மூலப்படி ஒன்றும், நகங்கள் மூன்றும் ஆக நான்கு படிகள் பதிவுஅஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். ஐம்பெருங் காப்பியங்கள் போல காப்பியத்தின் பெயர் அமைதல் வேண்டும். காப்பியம் வெளியிடும் உரிமை தமிழ் சங்கத்திற்கே உண்டு. நடுவர்கள் முறை மாற்றஇயலாதது. காப்பியம் அனுப்பப்படவேண்டிய முகவரி டாக்டர் ஆறு அழகப்பன், 19, மார்சல்சாலை, எழும்பூர், சென்னை, 600,008.

### வேலைவங்கிப் படிவம்மூலம்

# தொகுதிக்கு 1000 பேருக்கு வேலை வழங்க வேண்டும்

## ஜனாதிபதியிடம் கூட்டணி வலியுறுத்து

[புலோலி]

அரசாங்க தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர்மட்டப் பேச்சு வார்த்தையின்போது 78ம் ஆண்டு அரச, கூட்டணி எம். பிக்களுக்கு தொகுதிகளுக்கு 1000 வேலைவங்கிப் படிவங்கள் மூலம் வழங்கப்பட்ட வேலை வங்கிப் படிவங்களுக்கு வேலை வழங்கவேண்டுமென தமிழர் விடுதலைக் கூட்டணி வலியுறுத்தியதாகத் தெரிய வருகிறது.

அரசாங்கம் கடந்த 78ம் ஆண்டு திட்ட அமுலாக்கல் அமைச்சின்மூலம் அரசாங்க கூட்டணி எம்பிக்களுக்கு தொகுதிக்கு 1000 வேலை வங்கிப்படிவங்கள் என்ற திட்டத்தின் கீழ் வேலை வங்கிப்படிவங்களை வழங்கியிருந்தது.

ஆரம்பத்தில் சகல வேலை வாய்ப்புகளும் இவ் வேலைவங்கி விண்ணப்பப்படிவம் மூலமே வழங்கப்படுமென அறிவித்திருந்த அரசாங்கம் தமிழர் விடுதலைக்கூட்டணி எம். பிக்களுக்கு வழங்கப்பட்ட வேலை வங்கி விண்ணப்பங்களைப் பெற்ற இரண்டொரு சதவீதமானவர்களுக்கு வேலை வழங்கியபின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பிக்களுக்கு வழங்கப்பட்ட வேலைவங்கிப் படிவங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவித்திருந்தது. ஆனால் தற்பொழுது நடைபெற்றுவரும் அரசாங்க கூட்டணி உயர்மட்டப் பேச்சு வார்த்தை தொடர்ந்து அப்போது வழங்கப்பட்ட வேலை வங்கி விண்ணப்பப் படிவங்கள் மூலமாகவே வேலைவாய்ப்புகள் வழங்கப்பட வேண்டுமென அண்மையில் நடைபெற்ற இவ் உயர்மட்டப் பேச்சுவார்த்தையில் தமிழர் விடுதலைக் கூட்டணியினர் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவிடம் வலியுறுத்திக் கூறியதாகத் தெரிய வருகின்றது.

# கிராமங்களின் அபிவிருத்தி மக்கள் கையில் தங்கியுள்ளது

(புலோலி)

''கிராமங்களின் அபிவிருத்தி அக்கிராமங்களில் வாழும் மக்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. எனவே கிராமிய மக்கள் சமூக சேவை மனப்பான்மையுடன் சுயநலம் கருதாத சேவையிலீடுபடுவதன் மூலம் தமது கிராமங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்பாடடையச் செய்யமுடியும்.''

இவ்வாறு, பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர்பணிமனையில் நடைபெற்ற தும்பளை கிராமிய அபிவிருதிக் கூட்டத்தில் உரையாற்றிய பருத்தித்துறை உதவி அசரங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் குறிப்பிட்டார்.

நோர்வே அரசாங்கத்தின் உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ள இக்கிராம அபிவிருத்தி சம்பந்தமான கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய உதவி அரசாங்க அதிபர் திரு. வேலும்மயிலும் குறிப்பிட்டதாவது: நாம் ஒவ்வொருவரும் எமது கிராமத்தின் அபிவிருத்தியை மேம்படுத்துவதற்கு எம்மாலியன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கிராமிய மக்கள் தமது கிராமப் பகுதிகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் கவனமில்லாதிருந்தால் அக்கிராமம் ஒருபோதும் அபிவிருத்திமேம்பாடடையமாட்டாது. எமது கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு வசதிகளும், உதவிகளும், கிடைக்கும்போது அவ் வசதிகளையும், உதவிகளையும் சிறப்பாகப் பயன்படுத்தத் தவறக்கூடாது.

## கிராம அபிவிருத்திசங்கம்

(புலோலி)

குடத்தனை வடக்கு கிராமத்தை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் புதிய கிராம அபிவிருத்திச்சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

சிராமசேவை அலுவலர் திரு. செலஸ்தீன்ராசா தலைமையில் அமெரிக்கன்மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக் கிராம அபிவிருத்திச்சங்கத்தின் உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர் தலைவர் ஆர். அல்பிரட், உப தலைவர் ஆர். பிரான்சிஸ், செயலாளர் இ. புலேந்திரன், பொருளாளர் க. தெய்வேந்திரம். (க)

### கற்கோவளம் கொள்ளை:

## விசாரணையின் பின்னர் இரு இளைஞரும் விடுதலை

(புலோலி)

கற்கோவளம் ஆயுள்வேத டாக்டர் வீட்டில் சுமார் 4 லட்சம் ரூபா துணிசரக் சொள்ளைச் சம்பவம் தொடர்பாகப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களும் விசாரணையின்பின் விடுதலை செய்யப்பட்டனர்.

கற்கோவளத்திலுள்ளஆயுள்வேத டாக்டர் அருளானந்தம் வீட்டில் முகமூடியணிந்த துப்பாக்கி இளைஞர் கோஷ்டி நன்கு லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் இரண்டாயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் தொடர்பாகப் பருத்தித்துறை பொலீஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. எஸ். திருச்சிற்றம்பலம் தலைமையிலான பொலிஸ் கோஷ்டி இரண்டு இளைஞர்களைக் கைதுசெய்து விசாரணையின்பின் விடுதலை செய்தனர்.

கொள்ளையர்களின் கைவிரல் அடையாளங்களைப் பொலீஸ் பகுதி கைவிரல் அடையாள நிபுணர்கள் பதிவு செய்துள்ளனர். பொலீஸ் நாய் கொள்ளையர்களை மோப்பம் பிடிக்கவில்லை.

இக் கொள்ளைச் சம்பவம் தொடர்பாகப் பொலிசார் துரித புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (க)

# கொலை என்று தீர்ப்பு

(மாவிட்டபுரம்)

சுழிபுரம் காட்டுப்புலம் கொலைச்சம்பவம் குறித்த மரணவிசாரணையில் அது ஓர் கொலையே என்று மல்லாகம் நீதிபதி தீர்ப்பு வழங்கினார்.

கடந்த ஏழாம்திகதி மாலை சுழிபுரம் காட்டுப்புலம் என்னுமிடத்தைச் சேர்ந்த கந்தன் கார்த்திகேசு என்னும் விவசாயி ஆறு நபர்களால் வாள், கத்தி என்பவற்றால் வெட்டப்பட்டும், பொல்லு, இரும்புக் கம்பி என்பவற்றால் தாக்கப்பட்டும் ஸ்தலத்திலேயே கொலையுண்டிருந்தார்.

இக் கொலைச் சம்பவம் தொடர்பாக ஸ்தல விசாரணை மேற்கொண்ட மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் சட்டவைத்திய அதிகாரியை பிரேத பரிசோதனை செய்யுமாறு உத்தரவிட்டு மரண விசாரணையை ஒத்தி வைத்திருந்தார்.

இம் மரண விசாரணை மல்லாகம் நீதிமன்றத்தில் நீதிபதி முன் மீண்டும் எடுக்கப்பட்ட போது சட்டவைத்திய அதிகாரி சார்பில் பிரேத பரிசோதனை நடத்திய வைத்திய அதிகாரி திருமதி தெய்வேத்திரம் தமது அறிக்கையை சமர்ப்பித்தார்.

இதனையடுத்து நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் இது ஓர் கொலை என்று தீர்ப்பு வழங்கினார்.

இக் கொலைச் சம்பவம் குறித்து தேடப்பட்ட 6 சந்தேக நபர்கள் காங்கேசன்துறை பொலிசில் சரண் புகுந்தும், பின்னர் அவர்கள் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப்பட்டதும் தெரிந்ததே.

**தங்க நகைகளுக்கும் தங்க கட்டிகளுக்குமான பணவசதி**

**த பினன்ஸ் கம்பனி**

வழங்கும் மற்றுமொரு புதிய திட்டமாக

**தங்க நகைகளுக்கும், தங்க கட்டிகளுக்குமான பணவசதி**

வழங்க முன்வந்துள்ளது. உங்களுக்கு பண நெருக்கடி ஏற்படும்போது, எம்முடன் கலந்தாலோசித்து, தவணை முறையிலோ, குறிப்பிட்ட கால எல்லையிலோ, பணத்தைச் செலுத்தி உங்கள் தங்க நகைகளையோ அல்லது பவுண் கட்டிகளையோ பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களுக்கு:

விற்பனை முகாமையாளர்,

**த பினன்ஸ் கம்பனி லிமிட்.**

**249, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

போன்: 7680

### கள்ளுத்தவறணை கொள்ளை வழக்கு:

# லாச்சியைத் திறந்து பணக்கட்டையும் சம்பளப்பட்டியலையும் கொண்டுசென்றார்கள்

## தவறணை விற்பனையாளர் சாட்சியம்

(சாவகச்சேரி)

''சம்பவதினம் நான் தவறணையில் கள்ளுவிற்றுக் கொண்டிருந்தேன். எதிரிகளான இ. சின்னத்தம்பி, பொ. செல்வராசா ஆகியோர் வந்து சம்பளப்பணத்தை தருமாறு கேட்டார்கள். நான் சற்று பொறுத்துக்கொள்ளும்படி சொன்னேன். அவர்கள் அதற்கிடையில் எனக்கு அடித்துவிட்டு, லாச்சியைத் திறந்து பணக்கட்டையும் சம்பளப்பட்டியலையும் எடுத்துச் சென்றனர்''.

வரணி கள்ளுத்தவறணை கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த விற்பனையாளர் செ. திசராசயோகம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இல்வழக்கில் 1980 ஆகஸ்ட் 15ம் திகதி 1409 ரூபா 09 சதத்தையும் சம்பளப் பத்திரத்தையும் எடுத்ததாகவும் தாக்கியதாகவும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்காளி சார்பில்பொலிஸ் சார்ஜன்ட் செல்லையாவும் 1ம் எதிரிசார்பில் சட்டத்தரணி வி. பி. கார்த்திகேசு, சட்டத்தரணி செ. பாலகிருஷ்ணன் ஆகியோரின் அனுசரணையுடன் சட்டத்தரணி வ. செல்லத்தம்புவும், 2ம் எதிரி சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலனும் ஆஜராகினர்.

1ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி வ, செல்லத்தம்பு குறுக்கு விசாரணை செய்தார்.

சட்; சம்பளப் பட்டியலை எடுத்துக்கொண்டு ஓடியதாக ஒரு கட்டத்திலும் எடுத்துக் கிழித்தெறிந்ததாக ஒரு கட்டத்திலும் கூறினீர் எது சரி?— எடுத்துக் கிழித்தெறிந்தார்கள்.

சட்: நீர் பொலிசுக்கு எப்போ போனீர்? — 2 மணி அளவில்.

சட்: இதைப்பற்றி உமது அதிகாரிகளுக்கு அறிவித்தீரா? ஆம். முகாமையாளருக்கு அறிவித்தேன்.

சட்: அவர்கள் இங்கு சாட்சிக்கு வரவில்லை? இல்லை.

சட்: சம்பவ தினத்திற்கு முதல் நாள் இந்த எதிரிகளோடு சண்டை பிடித்தீர்? ஆம் அவர்கள் அடித்தார்கள். நானும் அடித்தேன்.

சட்; நான் சொல்கிறேன். நீர் சொல்வது எல்லாம் பொய் என்று? — நான் அதை மறுக்கிறேன்

2ம் எதிரி சார்யில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: நீர் இச்சங்கத்தில் எப்போது வேலை பார்கத் தொடங்கினீர்? 1974ம் ஆண்டு தொடக்கம்.

சட்: நீர் சோர்வினால் வேலைநீக்கஞ் செய்யப்பட்டீர்? ஆம் ஒரு பத்து நாட்கள், பின் வேலை கிடைத்துவிட்டது.

சட்: இந்த எதிரிகள் வழமையாக இங்கே தான் வருவார்களா? ஆம்.

சட்; இச்சம்பவம் எட்போ நடந்தது? இரவு 8மணி அளவில்.

சட்: இந்தச் சம்பளம் உமக்குக் கொடுத்தவர் யார்? காசாளர் தர்மகுலசிங்கம்.

சட்: அவர் இங்குசாட்சிக்கு வந்தவரா? இல்லை.

நீதிபதி: பொலிஸ் வாய் முறைப்பாட்டில் எவ்வளவிற்கு கள்ளு விற்றதெனக் கூறினீரா? இல்லை.

நீதி: பொலிசில் ஒரு முறைப்பாடும் இங்கொரு முறைப்பாடும் கூறுகிறீர்? மௌனம்,

சட்: சற்றுமுன் சம்பளப் பட்டியலை கொண்டு ஓடி விட்டான் என்றீர் பின்னர் கிழித்தெறிந்தான் என்கிறீர். எது சரி? மௌனம்.

நீதி: யோசித்து மறுமொழி கூறும். அல்லது சங்கடப்பட வேண்டியேற்படும்.

சட்: பொலிசுக்குப் போன பொழுது சம்பள பட்டியலை கொண்டு போனீரா? ஆம் அங்கே கிழிந்த நிலையில் அவர்கள் வாங்கி வைத்திருந்தார்கள்.

சட்: நீர் நீதிமன்றத்தில் சொன்னதற்கும் வித்தியாசமிருக்கிறது. எது சரி? மௌனம்.

நீதி: களவுபோன பணத்தில் 100 ரூபாத்தாள்கள் எத்தனை? ஞாபகமில்லை.

நீதி: இந்தப் பணத்தைக் கொண்டுவரும்பொழுது எதிரி நின்றார்களா? இல்லை.

மார்ச் 15ம் தேதிவரை விசாரணைபின்போடப்பட்டுள்ளது, [க]

## ஆதிசக்தி கழகம் வெற்றி

(புலோலி)

வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகத்திற்கும் ஆழிய விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

திரு. எஸ். அருட்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றிய இவ்உதைபந்தாட்டப் போட்டியில் வல்வெட்டித்துறை ஆதிசக்தி விளையாட்டுக் கழகம் 1—0 கோலால் வெற்றியீட்டியது.

யாழ். மாவட்டத்தில் மட்டும்

# மாணவர் ஒரு ரூபா வீதம் கொடுத்தால் இரண்டு லட்சம் ரூபா கிடைக்கும்

## கொடித்தின அதிபர் குழுத்தலைவர் விளக்கம்

[யாழ்ப்பாணம்]

யாழ்.மாவட்டத்தில்மட்டும் இரண்டு இலட்சம் மாணவர் கல்விகற்கின்றுர்கள் ஒவ்வொரு மாணவனும் குறைந்தது ஒரு ரூபா வீதம் கொடுததுதவினுல் பாடசாலைகளில் மட்டும் 2லட்சம் ரூபா பெறமுடியும் இக் கொடிதினத்தில் மட்டும் பொதுமக்கள் நன்கொடை அட்டைகளை பெற்று உதவினுல் 10லட்சம் ரூபா சேர்க்க முடியும்.

யாழ் பொதுசன நூலக புனரமைப்பைஒட்டிய நூலக வார ஆரம்ப வைபவத்தில் பேசிய சம்பந்திரிசியார் கல்லூரி அதிபரும் கொடித்தின கல்லூரி அதிபர் குழுத் தலைவருமானவணபிதாபிரான்சிஸ் யோசேப் அடிகளார் மேற் கண்டவாறு கூறினர்.

அவர்மேலும் கூறியதாவது: ''யாழ். நகரின் அறிவுக் களஞ்சியமும் கலைக்கூடமும் ஆகிய நூல் நிலையத்திற்கு ஏற்பட்ட நிலை தமிழ் மக்கள் மனதில் நீக்க முடியாத கறையை ஏற்படுததியுள்ளது.

நூல் நிலையத்திற்கு இடப்பட்ட தீ தமிழ் மகன் ஒவ்வொருவரினதும் அழிவை அழிப்பதற்கு இடப்பட்டதாகும். இந்நிலையில் எங்கள் நூல்நிலையத்தை பன்மடங்கு பெரியதாக கட்டியெழுப்புவதே எங்கள் கடமையாகும், நூல் நிலையத்தைக் கட்டி எழுப்ப ஒவ்வொரு தமிழ்மகனுக்கும் பங்கு உண்டு கடமை உண்டு. அதற்கான சந்தர்ப்பத்தையும ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அதைத் தான் இன்று நாம் செய்துள்ளோம். பாடசாலை மாணவர்கள் மட்டுமல்ல எல்லோரும் எங்கள் நூல்நிலையத்தைக் கட்டியெழுப்புவதில் பங்கேற்க வேண்டும் என்ற நோக்குடனே இதைச் செய்துள்ளோம்.

இக் கொடித்தினம் எவ்வாறு நடத்தப்படும்? யாழ். மாவட்டத்தில் கல்வி அதிகாரியின் பிரிவில் 13 சுற்றுவட்ரங்கள் உண்டு, ஒவ்வொரு சுற்றுவட்டாரத்திற்கும் ஒவ்வொரு இணைப்பு அதிபர் என ஒரு பாடசாலை அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்கள் ஒவ்வொரு சுற்றுவட்டாரமும் 05 வலையங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வலையத்திற்கும் வலைய அதிபராக ஒரு பாடசாலை அதிபர் நியமிக்கப்பட்டுள்ளார்.ஒவ்வொரு வலையத்திலும் மேலும் 05 உப வலையங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு உபவலையத்திற்கும் ஒரு பாடசாலையின் அதிபர் பொறுப்பாக இருப்பார். வீதியில் தெருக்கள் ஆகியவற்றிற்கு அமைவதாக கிட்டத்தட்ட ஒவ்வொரு உப வலையமும் ஏறத்தாழ 10 கண்டங்களாக பிர்க்கப்படும். ஒவ்வொரு கண்டத்திற்கும் 03 மாணவர்கள் கொண்ட குழு இயங்கும். இவர்கள் தங்கள் கண்டத்திலுள்ள ஒவ்வொரு வீட்டையும் தரிசிப்பர். வருபவர்கள் நூல்நிலைய பட்டிகள் அணிந்திருப்பார்கள்.

நீங்கள் கொடுக்கும் பணத்தைப் பெற்றுக்கொண்டு யாழ். நிலைய முததிரையிடப்பட்ட உண்டியலில் போடுங்கள் இவ்வித அடையாளங்களுடன் வருபவர்களிடம் மட்டும் பணத்தை கொடுத்துதவவும். ஒவ்வொரு தமிழமகனும் குறைந்தது ஒருரூபா எனினும் கொடுத்துதவ முன்வர வேண்டும், ஒரு குடும்பத்திலுள்ள ஒவ்வொருவரும் ஒருகொடியையாகிலும் பெற்றுக்கொண்டு உதவுங்கள்.

ஒரு ரூபாவிற்கு மேல் நன்கொடை கொடுக்க விரும்பியவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கப்படுகின்றது. அவர்களுக்காக நன்கொடை அட்டைகள் அச்சிடப்பட்டு உங்களிடம் வரும் மாணவர்களிடம் கொடுக்கப்பட்டிருக்கும், இதை ரூபா. 2, 5, 10, 25. 50 பெறுமதியுடன் அச்சிடப்பட்டு பெருந்தொகை வாங்குபவர்களுக்கு நினைவுச்சின்னமாகக் கொடுக்கப்படும். இந் நன்கொடை அட்டையில் மாநகர முதல்வரினதும்,ஆணையாளரினதும் கையொப்பங்கள் காணப்படும். இவைகளைப் பெற்று உங்கள் இல்லங்களில் நினைவுச் சின்னமாக வைக்கலாம்.

## 275 பேருக்கு கண்சிகிச்சை

(புலோலி)

கொழும்பிலிருந்து பருத்தித்துறைக்கு வருகைதரவுள்ள கண்வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி இந்திரா சிவயோகம் தலைமையிலான கண் வைத்திய நிபுணர்கள்குழு வடமராட்சிப் பகுதியிலுள்ள 275 கண் நோயாளர்களுக்கு இலவச கண் சத்திரசிகிச்சைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் இம்மாதம் 28ம் திகதிவரை நடைபெறவுள்ள இவ் இலவச கண் சத்திர சிகிச்சை முகாமை சுகாதார அமைச்சு இலங்கை விழிப்புலனிழந்தோர் சபை, பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச்சபை ஆகியனவற்றின் அனுசரணையுடன் பருத்தித்துறை லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்துள்ளது.

## எம். பி. பயமுறுத்தப்பட்டார்

(கொழும்பு)

மொனறுகலை எம். பி. திரு. ஆர். எம். பி. பண்டாரராவை துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தியதாக மீரிஸ் என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திரு. பண்டார சிரமதான வேலைசளை மேற்கொள்ள தனது தொகுதிக்கு சென்ற பொழுதே இப்பயமுறுத்தல் இடம் பெற்றது. (இ—வெ)

# அரசு ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு சன்மானம்

(கொழும்பு)

''அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் இடம்பெறும் வீண் விரயங்கள், மோசடிகள் ஆகியவற்றைத் தடுப்பதற்கு உதவும் ஊழியர்களுக்கு சன்மானம் வழங்கப்படும். இத்தகைய ஊழியர்களுக்கு பதவி உயர்வின்போதும்முன்னுரிமை வழங்கப்படும்.''

மேற்கண்ட தீர்மானம் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.(வெ

## ''காசி ஆனந்தன் கவிதைகள் வெளியீடு''

(யாழ்ப்பாணம்)

''காசி ஆனந்தன் கவிதைகள்'' நூல் வெளியீட்டு விழா மார்ச்மாத பிற்பகுதியில் யாழ் நகரில் சிறப்பாக நடைபெறவிருக்கிறது. அன்றைய தினம் கவிஞர் காசி ஆனந்தனுக்கு வரவேற்பும் அளிக்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளைத் தமிழர்விடுதலைக் கூட்டணி இளைஞர் இயக்க செயலாளர் மாவை சேனுதிராசா மேற்கொண்டுவருகிறுர்.

இவ்விழாவில் த. வி. கூட்டணித்தலைவர்கள், யாழ், மாவட்ட அபிவிருத்திசபை உறுப்பினர்கள், யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் உரையாற்றுவார்கள், (மா)

## மூவர்ண தபால் பெட்டிகள்

[மட்டக்களப்பு]

மட்டக்களப்பு பிரதம அஞ்சல் அலுவலகத்தில் பச்சை, நீலம், சிவப்பு, ஆகிய நிறங்களில் மூன்றுதபால்பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

பச்சை நிற தபால் பெட்டியில் மட்டக்களப்பு நகர தபால்களையும், நீலநிறபெட்டியில் வெளிநாட்டு தபால்களையும், சிவப்புநிற பெட்டியில் ஏனைய மாகாணத்தபால்களையும் பொதுமக்கள் போடுமாறு கோரப்படுகின்றனர்.

1978-ல் காணுமற் போன

# தஞ்சை நடராஜர் சிலை டெக்ஸாஸில் கண்டுபிடிப்பு

சென்னை, பெப் 24.

தஞ்சாவூரில் நான்கு வருடங்களுக்கு முன்னர் காணுமற் போன புராதன நடராஜர் சிலை அமெரிக்க மாநிலமான டெக்ஸாஸில் ஒரு நூதனசாலையிலிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது,

இதன் பெறுமதி ஒரு கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சர்வதேச பொலிஸாரின் ஒத்துழைப்புடன் இச்சிலையை இந்திய இரகசிப் பொலிஸார் கண்டுபிடித்தனர்,

நடராஜர் சிலையை மீண்டும் இந்தியா கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை இந்திய அரசு இப்பொழுது மேற்கொண்டுள்ளது.

இச்சிலை அமெரிக்காவுக்கு எவ்வ்தமாகக் கடத்தப்பட்டது; இக்கடத்தலின் பின்னணியில் யார் உள்ளனர் என்பதைக் கண்டறிவதில் சர்வதேசப் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்

ஊறணி மயானம்

## திருத்த வேலைக்கு ரூ. 90,000ஒதுக்கீடு

(புலோலி)

பொலிகண்டியில் உள்ள ஊறணி என்னுமிடத்திலுள்ள இரு பொது மயானங்களையும் ஒன்றிணைக்கும் நடவடிக்கைகளை வல்வெட்டித்துறை நகரசபை மேற்கொண்டுள்ளது.

இருபொது மயானங்களையும் ஒன்றிணைத்து திருத்தியமைத்துச் சுற்று மதிலும் கட்டப்பட்டு சீர்திருத்வதுதற்கென உள்ளூராட்சி அமைச்சு வல்வெட்டித்துறை நகரசபைக்கு 90 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளது.

வல்வெட்டித்துறை நகர முதல்வர் திரு. எஸ். ஞானமூர்த்தி, இவ்விருமயானங்களையும் ஒன்றிணைக்கும் வேலையை விரைவில் ஆரம்பிப்பதோடு, அதற்கென காவலாளி ஒருவரையும் நியமித்துப் பராமரிப்பதற்கான நடவடிக்ககள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவித்தார். (க)

யாழ். நீதிமன்ற வாசலில்

# நடமாடியவர் பொலிஸாரால் தேடப்பட்டவராம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். நீதிமன்ற வாசலில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய ஒருவரை யாழ். நீதிமன்ற பொலிஸார் கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தியபோது, அவர் திருகோணமலையில் நடைபெற்ற திருட்டு சம்பந்தமாகத் தேடப்பட்டு வந்தவர் என்றும், மற்றும் பல வழக்குகளில் சம்பந்தப்பட்டவர் என்றும் தெரிய வந்துள்ளது.

யாழ். நீதிமன்றத்தில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் எஸ். மாணிக்கவாசகர், பொலிஸ்காண்ஸ்டபிள்களான ஏ. கந்தசாமி, பி. ராசலிங்கம் ஆகிய மூவரும் கடமைபுரிந்துவிட்டு நீதிமன்றவாசலில் நின்ற பொழுது, யாழ். முஸ்லிம் தெருவைச் சேர்ந்த சாகுல் ஹமீட்சுபைர் (28 வயது) என்பவர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியபொழுது கைது செய்யப்பட்டார்.

இவர் திருகோணமலையில் 'ரெயிலறிங்' வேலைசெய்து வந்த இடத்தில் 4,000 ரூபா பெறுமதியான பித்தளைச் சாமான்களைதிருடியது சம்பந்தமாக திருகோணமலைப் பொலிசாரால் தேடப்பட்டுவந்தவரென விசாரணையில் தெரிய வந்தது.

இவர் யாழ். நீதிமன்ற நீதவான்ரி.ஜோகநாதன்முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது மார்ச் முதலாம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி நீதவான்உத்தரவிட்டார். (மா)

## நகரை அழகுபடுத்தும் திட்டம்

[மட்டக்களப்பு]

நகர அபிவிருத்தி அதிகார சபையினுல் திட்டமிடப்பட்டு மட்டுநகர் சுங்கப்பகுதியிலும் மட்டக்களப்பு பெரியகடை வீதியிலும் பல அபிவிருத்தி வேலைகள், நடைபெற்றுக் கொண்டிருப்பது போல மட்டக்களப்பு நகரப் பகுதியிலுள்ள கட்டிடங்களையும் மெருகூட்டி நகரைப்புதுப் பொலிவாக்கும் பூர்வாங்க நடவடிக்கையாக ஒரு கலந்துரையாடல் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு கச்சேரியில் நடைபெறவுள்ளது. இக் கலந்துரையாடலில் கலந்து கொள்ளுமாறு சகல வியாபார நிலைய உரிமையாளர்களும் மட்டக்களப்பு நகர அபிவிருத்தி அதிகார சபையின் திட்ட இணைப்பு உத்தியோகத்தரினுல் அழைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்

## இந்துக் கல்லூரி கோஷ்டி வெற்றி

(அரியாலை)

யாழ். இந்துக்கல்லூரிக்கும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரிக்குமிடையே யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வருடாந்த கிரிக்கட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி இனிங்ஸ்சாலும் 27 ஓட்டங்களாலும் வெற்றி பெற்றது.

யாழ். இந்துக்கல்லூரி முதலில் துடுப்பெடுத்தாடி 9 விக்கட்டுகளை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

யூனியன் கல்லூரி தனது முதலாவது ஆட்டத்தில் எல்லாவிக்கட்டுசுளையும்இழந்து103 ஓட்டங்களைப் பெற்றது, யூனியன் கல்லூரி தொடர்ந்து தனது இரண்டாவது ஆட்டத்தில் எல்லா விக்கட்களையும் இழந்து 87 ஓட்டங்களைப்பெற்றது.

வல்லை முக்கொலைச் சம்பவம்:

# மற்றெரு சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதி

(புலோலி)

வல்லை முக்கொலை சந்தேக நபர்களில் மற்றுமொரு சந்தேக நபரையும் 7500 ரூபா பிணையில் செல்ல யாழ். மேல் நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

கப்பர்மலை அறுவர் பயங்கர துப்பாக்கிச் சூட்டுக் கொலைச்சம்பவ எதிரிகள் அறுவர் யாழ். சிறைச்சாலையிலிருந்து பருத்தித்துறை நீதிமன்றத்திற்குக் கொண்டுவரப்பட்டபோது மூவர் வல்லை உப்புவெளியில்வைத்து முகமூடி அணிந்த கோஷ்டியினரால் துப்பாக்கியால் சுடப்பட்டும் வாளால் வெட்டப்பட்டும். கொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பதினுறு சந்தேக நபர்களில் அருணகிரிராசா என்பவர் ஏற்கனவே பிணையில் விடப்பட்டிருந்தார்.

மற்றுமொரு சந்கேநபரான கே. தாராசிங்கம் என்பவரைப் பிணையில் விடுமாறுகோரி சட்டத்தரணி ஆர். ஸ்ரீசிவாயா யாழ்.மேல்நீதிமன்றத்தில் பிணைமனு வொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இப்பிணைமனுமீதான விசாரணைசளை மேற்கொண்ட யாழ். மேல்நீதிமன்றம் சந்தேக நபரை 7,500 ரூபா உறுதிப்படுத்தப்பட்ட பிணையில் செல்ல அனுமதி வழங்கியது. இதனைத்தொடர்ந்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் நீதவான் திரு.கே. எஸ். மகேசன் முன்னிலையில் சந்தேகநபரான தாராசிங்கம் ஆஜர்செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டுள்ளார். ஏனைய சந்தேகநபர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (க)

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
Michael Caine Omarsharif
Ashanti
Adults—Action—Color

வெஸ்லி சுன்னிப்பாய்
தினசரி: 2.30 6.15 9.15
1—3—82 வரை
ஆதிபராசக்தி

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
METEOR
27—2—82 முதல்
THE MEAN MACHINE

லிடோ
(யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
பூந்தளிர்

ஸ்ரீதர் கடைசி வாரம்
தினசரி: 10:30, 2:30, 6:00, 9:30
யாழ். நகர் சிவாஜி - ஜெயலலிதா
பட்டிக்காடா பட்டணமா
(புதியபிரதி)

2-வது ஜனத்திரள் மாதம்
ராணி (யாழ்.நகர்)
தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்.நகர்) 10—30, 2—30, 4—45
7—00: 9—30
JIM BROWN, JIM KELLY
Three The Hard Way
27—2—82 "HORROR EXPRESS" —Terror Film—
(Strictly adults only)

மனோகரா (யாழ்ப்பாணம்)
10—30, 2—30, 6—30, 9—30
ஞானக்குழந்தை

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
நடிகர் திலகம் சிவாஜி-புன்னகை அரசி
கே. ஆர். விஜயா, ஸ்ரைல் நடிகன்
ரஜனிகாந்த்-சுமித்ரா-தேங்காய்
ஜஸ்டிஸ் கோபிநாத்

யாழ். றீகல் தினசரி 10—30, 2—30,
6—30, 9—30 நான்குகாட்சிகள்
பெண்களின் ஏகோபித்த பாராட்டுகளுடன்
காட்சியளிக்கிறது.
விஜயன்
சுருளிராஜன்
சத்தியகலா
இசை:
சங்கர்—
கணேஷ்
தனிமரம்
டைரக்ஷன் துரை
கலர்

ராஜா தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
செம்மீன் வெற்றிப் படத்தையடுத்து வெளிவரும்
வெள்ளி விழா சித்திரம்.
பிரதாப்
சுரேகா
தக்காரா
(கலர்—மலையாளம்)
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு மட்டும்)

## தவக்கால நற்சிந்தனை



"நம்மைப் பின் செல்லுகிறவன் அந்தகாரத்தில் நடப்பதில்லை" என்று ஆண்டவர் திருவுளம் பற்றியிருக்கிறார்) ஞானத் தெளிவடையவும், இதயக் குருட்டாட்டமெல்லாவற்றிலும் நின்று மீட்கப்படவும் நாம் மெய்யாகவே ஆசிப்போமானல் அவருடைய சீவியத்தையும் நடவடிக்கைகளையும் நாம் கண்டுபாவிக்க வேண்டுமென்று அந்த வார்த்தைகளால் நமக்குக் கற்பிக்கப்படுகின்றது. ஆதலால் யேசுக் கிறிஸ்துநாதருடைய சீவியத்தையும், நடவடிக்கைகளையும் தியானிப்பதே நமது உத்தம படிப்பாய் இருக்கக்கடவது.

(கிறீஸ்துநாதர் அநுசாரம்,

## இன்றைய பலன்

மாசி மாதம் 14ம் திகதி
வெள்ளிக்கிழமை
(26—2—82)

மேடம்: மேடைப் பேச்சாளர்களும் நடிகர்களும் பெரும் புகழ் அடைவர், பொருள் வரவுக்கும் இடமுண்டு, இல்லத்தில் திருப்திகரமான நிலை தென்படும், அந்தஸ்திலும் முன்னேற்றம் உண்டு.

இடபம்: தற்பெருமைமூலம் தடுமாற்றம் ஏற்படும், கண் துடைப்பு வேலை நடக்கும் கவனம் செலுத்தவும், பெரியோரைப் பகைத்துக்கொள்ளாமல் பொறுமையைப் பேணி நடக்கவும்.

மிதுனம்: ஆக்கப்பணியில் ஈடுபடுவீர்கள், பிறருடைய ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், தாய்வழிமூலம் நற்செய்தி கிடைக்கலாம், எதிர்பாராத விருந்துபசாரத்துக்கும் இடம் ஏற்படும்.

கடகம்: செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும், வழக்கு விவகாரங்களில் வெற்றி உண்டு. வெளியிடத்திலிருந்து மகிழ்ச்சியைத் தேடித் தரும் செய்தியும் கிடைக்கும்.

சிங்கம்: உறவாடிக் கெடுப்பதற்கு பகைவர்கள் வருவர், உற்சாகம் குன்றும், பிரயாணத்தின்போது பொருள் தவறக் கூடும், சிலருக்கு உஷ்ணரோகம் சம்பந்தமான நோய் ஏற்படும்.

கன்னி: களஸ்திரவழியால் மகிழ்ச்சிக்கு இடமுண்டு, பிரிந்தவர்கள் மீண்டும் வாழ்க்கையில் இணைவர், காதலர்கள் வாழ்வில் தித்திப்பான சம்பவங்கள் நடைபெறும். புத்திர வழியாலும் மகிழ்ச்சிக்கிடம் உண்டு.

துலாம்: பிரச்னைகள் மேலும் சிக்கலாகும், உணவு விடயத்தில் பிரியக்குறைவு தென்படும், கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருப்பது நன்று, உடல் நலனில் அதிக கவனம்வேண்டும்.

விருச்சிகம்: பூமியால் லாபம் உண்டு, புத்திரர் புகழும் சேரும், பொதுசன தலைமைக்கான வாய்ப்புக் கிடைக்கும், உடல் நலம் பாதிக்கக் கூடும ஆகையால் வாய்வுப் பதார்த்தங்களை நீக்கவும்.

தனு: சுகபோகதினம் சொகுசான வாழ்க்கையையேவிரும்புவீர்கள், ஆடம்பரமான ஆடைகளில் மனநாட்டம் செல்லும், படித்தவர்களின் தொடர்பினுல் பயன் அடைவீர்கள், எல்லாம் இன்பமயம்.

மகரம்: அதிர்ஷ்ட தேவதையின் அணைப்பு உங்களுக்குக் கிடைக்கலாம், திரைப்படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குஉற்சாகமளிககக்கூடும், செல்வாக்குள்ள ஒருவரின் ஆதரவும் தப்பாமல் உண்டு.

கும்பம்: பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படலாம், முகமன் பேசுவோர் விடயத்தில் முன்னெச்சரிக்கையுடன் இருக்கவும், அதிக சிந்தனைக்கு இடமளியாது வாய்வுப்பதார்த்தங்களை தவிர்க்கவும்.

மீனம்: குமுறும் நெஞ்சுடன் நாளைக் கடத்துவீர்கள், எதிலும் அவசர முடிவை தவிர்த்துக்கொள்ளவும், உடல் நலத்தில் அதிக கவனம் செலுத்துக, பிரயாணத்தைத தவிர்ப்பது விரும்பத்தக்கது.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

இந்திய சரக்குக் கப்பலை

# கடத்தியவர்கள் கைது! கப்பலும் மீட்கப்பட்டது

(சிலாபம்)

சிலாபம்—கொழும்பு கடற்பிராந்தியத்தில்சென்றுகொண்டிருந்த இந்திய சரக்குக கப்பலொன்றை, துப்பாக்கி முனையில் அதன் தளபதியையும், சிப்பந்திகளையும் பயமுறுத்திக் கொள்ளையடிப்பதற்காகக் கடத்திவந்து சிலாபத்தில் வைத்திருந்தபோது மேற்படி கப்பலை பொலிஸ்—கடற்படையைச் சேர்ந்த வீரர்கள் மீட்டுள்ளதுடன் கடற் கொள்ளையரையும் கைது செய்துள்ளனர்.

இக்கப்பற் கொள்ளை பற்றி அதன் தளபதி தெரிவிக்கையில்; கடந்த கிழமை தாம் சிலாபம்—கொழும்பு கடற்பிராந்தியத்தில் சென்று கொண்டிருந்தபோது சிலர் படகொன்றில்வந்து துப்பாக்கி முனையில் தம்மைப் பயமுறுத்தி கப்பலை எடுத்துச் சென்றதாகவும், தானும் தனது ஏனைய 13 சிப்பந்திகளும் ஒருவாறு தப்பித்துக்கொண்டு இலங்கைப் பாதுகாப்புச் சேவையினருடன் தொடர்புகொண்டதாகவும் தெரிவித்தார்.

சிலாபம் பொலிஸார் மேற்படி தளபதி கொடுத்த விபரங்களின்படியே கப்பலை மீட்டுள்ளனரென்றும் இக்கொள்ளையுடன் தொடர்புடையவர்களெனச் சந்தேகிக்கப்படும் பலரைக் கைது செய்துள்ளனரென்றும் அறிவிக்கப்பட்டது. (கி)

# "கட்டிவைத்துவிட்டு கொள்ளையடித்தனர்"

## நகைக் கொள்ளை வழக்கில் சாட்சியம்

(சாவகச்சேரி)

சம்பவதினம் எனது வீட்டில் படுத்திருத்தமகனையும், மனைவியையும், பலவந்தமாக இழுத்துமுற்றத்துக்குகொண்டு சென்று கத்திப்பிடியினுல் 1ம், 4ம் எதிரிகள் அடித்தனர் பின் மகனையும், கட்டிவிட்டு, 2ம் எதிரி எங்கள் வீட்டுப்பெட்டகத்தை திறந்து 39,000 ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளை அடித்தனர்.

கோயில்வயல்நகைக்கொள்ளை வழக்கில் சாட்சியமளித்த ஆறுமுகம் கதிர்காமநாதன் மேற்கண்டவாறு கூறினுர்,

இவ்வழக்கு பளைசுற்று நீதிமனறத்தில் நீதிபதி எம். எஸ். காரியப்பர் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் கோயில்வயலில் 81 ஏப்பிரல் 12ம் தேதி மகேந்திரன், துரைராசா, இரத்தினம், இராசலிங்கம் என்பவர்கள் ஆ. கதிர்காமநாதன் என்பவருடைய வீட்டினுட் பிரவேசித்து அவர் மனைவி மகன், என்பவர்களைத் தாக்கியதோடு ரூபா 39,000 பெறுமதியான நகைகளையும் கொள்ளையிட்டார்கள் எனக் குறறம்சாட்டப்பட்டிருந்தது.

ஆறுமுகம் கதிர்காமநாதன் மேலும் குறிப்பிட்டதாது: "கடந்த ஏப்பிரல் 1ம்திகதி இரவு 9 மணிஅளவில் நாங்கள் படுக்கைக்குப்போனேம். அப்பொழுதுசந்தேகநபர்கள் நால்வரும் உள்ளேவந்து 'எடேய்' என உரக்கக்கூப்பிட்டனர். நல்ல நிலவாகையால் அவர்களை நான் அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. நான் எழுந்து முற்றத்திற்கு வர 2ம் 3ம் எதிரிகள் எனது கையை இழுத்துத்தடைசெய்தனர் அவர்கள் கையில் பொல்லுகள் வைத்திருந்தனர். 1ம் எதிரி கையில் துவக்குடனும் 4ம் எதிரி பொல்லுடனும் நின்றனர். வீட்டுக்குள் யார் இருக்கிறது? எனக் கேட்டனர் நான் மனைவியும் மகனும் நானும் என்றேன்.

அப்பொழுது 1ம் 4ம் எதிரிகள் உள்ளே சென்று மனைவியையும் மகனையும் இழுத்து முற்றத்திற் கொண்டு சென்று கட்டினர். ஆனுல் மனைவியை ஒன்றும் செய்யவில்லை. பின்னர் மனைவியின் அறைக்குள் சென்று பெட்டியைத்திறந்து தாலிக்கொடி, காப்பு, சங்கிலி என்பவற்றை 3ம் எதிரி எடுத்தார்.

பின்னர் 1ம் 4ம் எதிரிகள் மகனுடைய வீட்டினுள் சென்று நகைகளையும்எடுத்தனர் அவர்கள் அன்றையதினம் அங்கில்லை தாலிக்கொடி 2 சங்கிலி 2, காப்பு கைக்கடிகாரம் காசு 2000 உட்பட 39000 ரூபாவை கொள்ளையடித்துச் சென்றனர்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணி செ. அம்பிகைபாலன் ஆஜரானுர் ஏப்ரல் 6ம் திகதி வரை விசாரணை ஒத்திவைக்கப்பட்டது. (க)

### அனுராதபுரத்தில்...

(3ம் பக்கத்தொடர்ச்சி)

வித்தியாலயத்தில் மார்ச் மாதம் 3ம் திகதி மாலை நூற்றுண்டு விழா கொண்டாடப்படவிருக்கிறது.

ஆசிரியர் திரு. தா. கருணைனந்தசிவம் தமிழாராய்ச்சியாளர் திரு. ஆ. தேவராசன் ஆகியோர் விர்வுரை நிகழ்த்துவார்கள். (க)

உடுப்பிட்டித் தொகுதி

## விசேட சேவை உத்தியோகத்தர்

(புலோலி)

உடுப்யிட்டித் தொகுதி விஷேட சேவை உத்தியோகத்வர்களாகத் திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சினுல் நியமிக்கப்பட்டோர் விபரம்.

து.கணபதிப்பிள்ளை தொண்டமானுறு, (கெருடாவில்) சி. சிவபாலசிங்கம் (வல்வெட்டித்துறை வடக்கு, தெற்கு) இ. சோமசுந்தரம் (உடுப்பிட்டி, வல்வெட்டி) கே. சுந்தரபாரதி (கரவெட்டி மத்தி, மேற்கு) எஸ் வரதராசன் (பொலிகண்டி, கரவெட்டி வடக்கு) என. சிவபாலன் துன்னலை தெற்கு, கரவெட்டி கிழக்கு) எம். மார்க்கண்டு (கப்புதூ) ரி. செல்வநாதன் (கரணவாய் வடக்கு, தெற்கு)

உடுப்பிட்டி எம். பி. திரு த. இராசலிங்கத்திதி சிபார்சின் பேரில் இவ்விசேட சேவை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டனர்.

வடமராட்கி தெற்கு மேற்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இவ்விசேட சேவை உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டுவருகின்றன (க)

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

புத்தம் புதிய TV 27'' நஷனல் பனசோனிக் With Electronic Remote Control வீடியோ—நஷனல் பனசோனிக் NV—7200 213, நாவலர் ரோட், யாழ்ப்பாணம். 2376

1 ஸ்ரீ 9000 தொடர்பிலக்க வொக்ஸ்வேகன் கார் நல்ல நிலையில் விற்பனைக்குண்டு, கலனுக்கு 47 மைல் ஓடக்கூடியது. புதிய பெயின்ற், ரயர், பற்றரி. தொடர்பு: ரோயல் வைன் பாம், இருபாலை ரோட், கோண்டாவில். 2388

எங்களிடம் அடைவு கடைகளுக்கும், வியாபார ஸ்தாபனங்களுக்கும், வீட்டுப்பாவனைக்கும் உகந்ததுமான இரும்புப் பெட்டிகள் எந்நேரமும் பெற்றுக்கொள்ளலாம். இரும்புப்பெட்டி தயாரிப்பாளரும் பழுதுபார்ப்பவர்களும், ''எவர் சில்வர் மாளிகை'' 11, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2394

பிறிபெக்ட் 100 E மொடல் EN கடைசி இலக்க கார் விற்பனைக்குண்டு. திருத்தி அமைக்கப்பட்ட என்ஜின் நல்ல நிலையிலுண்டு. விபரங்களுக்கு க. பஞ்சலிங்கம் வேம்படி (கிழக்கு தெரு) வல்வெட்டித்துறை. 2375

மானிப்பாய் தபாற் கந்தோருக்கு எதிராக ஆஸ்பத்திரி, பஸ் நிலையம், கடைகளுக்கு அண்மையில் பிரதான வீதியில் பதினெட்டுப் பரப்பு காணி விற்பனைக்குண்டு. கமம் செய்ய உகந்தது. கட்டிடங்களும் கட்டலாம். தொடர்பு: 18, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். (2382)

## தேவை

கொழும்பில் வசிக்கும் குமாஸ்தாவுக்கு யாழ். மத்திய கல்லூரிக்கு அண்மையில் சகல வசதிகளும் கொண்ட ஒரு அறை தேவை. விபரங்களுக்கு: சி. பிரபாகரன், 226, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (தொலைபேசி 8088) 2383

சிறந்த கடைச்சல் தொழிலாளர் (LA HEMAN) யாழ்நகரில் பிரபல கடைச்சல் தொழிற்சாலைக்கு உடன்தேவை. விண்ணப்பிக்கவும். வின்சிலோ அன் கோ, 291 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2385

## வகுப்பு

யாழ். நகரில் 10 ம் வகுப்பு மாணவர்களுக்கு தனிப்பட்ட முறையில் கணித, விஞ்ஞான பாடங்களைக் கற்பிப்பதற்கு அனுபவம் பெற்ற ஆசிரியர்கள் உள்ளனர், விரும்புவோர் விண்ணப்பிக்க. விளம்பர இல: 2387, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 2387

## தவறிவிட்டது

24—2—82 முற்பகல் 10—30 மணியளவில பொண்ட் இன்ஸ்ரிடியூட் முன்பாக தங்க மோதிரம் சைக்கிளில் வந்த நீளக்காற்சட்டைஅணிந்தஇரு வாலிபர்கள் எடுத்ததாக அறியப்படுகிறது. ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும், சு. ஜெயப்பிரகாஸ், 76, பீச் ரோட், நாவாந்துறை. (2390)

## விசேட அலுவலர்

(மண்டைதீவு)

மண்டைதீவு, அல்லைப்பிட்டி மண்கும்பான்கிழக்கு, ஆகிய இடங்களுக்கு விசேட சேவை உத்தியோகத்தராக திரு. கி. அரசகுலசிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

யாழ்ப்பாணப் பட்டணம் என்னுமிடத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற எதெல் ருெபெக்கா இராசமணி துரைரத்தினம் என்பவரின் மரணச் சாதனமில்லா மரணச் சொத்தினதும் உடைமைப் பொருள்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

டக்லஸ் ஆம்ஸ்ரோங் துரைரத்தினம், 12, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

மனுதார்

மரணசாதன நியாயதிக்கம் இலக்கம்: 3654 T

எதிராக

உவில்பெறெட் ஜீவருள்நாதன் துரைரத்தினம் தற்பொழுது 33, வண்டவேட் பிளேஸ், தெகிவளை.

எதிர்வாதி

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1982-ம் ஆண்டு சித்திரை மாதம் 02 ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்ருனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுகின்ருர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

**தா. குலஞானம்,**
பதிவாளர்.

1982—ம் ஆண்டு மாசி மாதம் 8—ம் நாளன்று தேதியிடப்பட்டது. (2384)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# விஜயபுரத்தில் 3 பிள்ளைகளின் தாயார் கொலை

## சந்தேகநபர் பொலிஸில் சரண்

(சாவகச்சேரி)

கிளிநொச்சியைச் சேர்ந்த விஜயபுரத்தில், மூன்று பிள்ளைகளின் தாயார் கொலை செய்யப்பட்டுள்ளார். இக்கொலை தொடர்பாக, இறந்தவரின் ஆசைநாயகன் எனக் கூறப்படும் சந்தேக நபர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

கிளிநொச்சியைச் சேர்ந்த அரசம்மாவின் மரண விசாரணையில், மேற்கண்ட தகவல் தெரியவந்தது. பதில் நீதிபதி செ. பாலகிருஷ்ணர் மரண விசாரணை நடத்தினுர்.

சந்தேக நபரான செல்லத்துரை இறந்தவரின் சகோதரியை 19 வருடங்கட்குமுன் விவாகம் செய்திருந்தாரென்றும் அவரைத் திருமணம் செய்து 6 வருடங்களின் பின்னர் அரசம்மாவுடன் தொடர்பு கொண்டிருந்ததினுல் அவருக்கு இரண்டு பெண்ணும் ஒரு ஆணும் பிறந்திருந்தார்கள் என்றும் மரண விசாரணையில் தெரியவந்தது.

கடந்த பத்து மாதகாலமாக இருவரும் வாக்குவாதப்பட்டு வந்தார்கள் என்றும் கடந்த 6 மாத காலமாக ஒருவரை ஒருவர் விட்டுப் பிரிந்திருந்தார்கள் என்றும் தன்னைத் தொண்டையிற் பிடித்துத் திருகிக் கொலை செய்ய எத்தனித்ததாகப் பொலிசிற்கூட அரசம்மா முறையிட்டிருந்தார் என்றும் மேலும் தெரியவந்தது.

அரசம்மா அரசாங்கக் காணியொன்றுள் அத்துமீறிப் புகுந்து நல்லமுறையில் ஓர் கல் வீடும் கட்டியிருந்தார் என்றும் கடந்த 4, 5 மாத காலமாக அவர்களுக்கிடையே குடும்பச்சண்டை இருந்ததாகவும் அவருடைய பிள்ளைகள் இராமநாதபுரத்தில் பேத்தியார் வள்ளிப்பிள்ளையோடு வசித்து வருகின்ருர்கள் என்றும் 19ம், 20ம் திகதி அரசம்மாவுடன் ஒற்றுமையாகி வீட்டுக்குப் பக்கத்திலுள்ள பொன்னம்பலம் என்பவருடைய வீட்டில் படுத்திருந்தார்கள் என்றும் மரண விசாரணையில் மேலும் தெரியவந்தது. தன்னுடைய வீட்டில் கொலை செய்துபோடுவார் என்றபயம் அடிமனதில் இருந்தது என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

ஞாயிறு காலை எழும்பிச் சந்தைக்குச் செல்வதாக புறப்பட்டுச் சென்றதாகவும் காலையில் வீட்டில் இறந்துகிடக்கக் காணப்பட்டார் என்றும் ஆசைநாயகனை சந்தேக நபர் செல்லத்துரை பொலிசில் சரணடைந்துள்ளார் என்றும் விசாரணையில் கூறப்பட்டது.

கிளிநொச்சி வைத்திய அதிகாரி பொன்னம்பலம் நவரத்தினராசா பிரேதபரிசோதனை செய்தார். சாட்சிகள் பாலசிங்கம், வள்ளிப்பிள்ளை இறந்தவரின் சகோதரன் மகேந்திரன் என்பவர்சள் சிளிநொச்சிப் பொலிசாரால் ஆஜர் செய்யப்பட்டனர்.

சாட்சியங்களை பதிவு செய்த பின்னர் பதில் நீதிபதி கொலையெனத் தீர்ப்பளித்து சந்தேக நபர் செல்லத்துரையை அடுத்தமாதம் 4ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி உத்தரவிட்டார். (க)

## அரச வாக்குமூலங்களின்

# மொழிபெயர்ப்பு இல்லை; வழக்கு ஒத்திவைப்பு!

(கொழும்பு)

அரசுதரப்பு வாக்குமூலங்கள் சிங்கள மொழியில் பதியப்பட்டிருப்பதனுல், இவற்றின் மொழிபெயர்ப்பைஎதிரிதரப்பு சட்டத்தரணி திரு. எம். சிவசிதம்பரம் கேட்டுக்கொண்டதன் பேரில் குட்டிமணி மீதான வழக்கு விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இவ்வழக்கில் குட்டிமணி என்றும்அழைக்கப்படும்செல்வராசா யோகச்சந்திரன் மீதும், ஏனைய இருவர்மீதும் பொலிஸ் காஸ்டபிள் ஒருவரது கொலை தொடர்பாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அரச சட்டத்தரணி தாம் இவ்வழக்கை நடத்தத்தயாராக இருப்பதாக கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதியிடம் தெரிவித்தார். ஆயினும் எதிரி தரப்பு சட்டத்தரணியான திரு. எம். சிவசிதம்பரம் அரசவாக்குமூலங்களின்மொழிபெயர்ப்புத்தமக்குக் கிடைக்கவில்லையென்றும் இதனுல் தாம் வழக்கை நடாத்ததயாராக இல்லையென்றும் நீதிமன்றத்தில் தெரித்தார்.

இதனைத் தொடர்ந்து மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ரியூடர் அல்விஸ் எதிரி சார்பு சட்டத்தரணிக்கு அரச வாக்குமூலங்களின் மொழிபெயர்ப்பை வழங்கும்படி உத்தரவிட்டுவிசாரணையை ஒத்திவைத்தார். (கி)

# ''1000 சுருட்டுக்கு 85 ரூபா என்று நோட்டீஸ் அடித்தபின் கூலியை குறைத்துக் கொடுக்கிறுர்கள்''

## தயாரிப்பாளர் சங்கத் தலைவர் கவலை

[யாழ்ப்பாணம்]

வடமாகாண சுருட்டுத்தயாரிப்பாளர் சங்கம் 82ம் ஆண்டு தொடக்கம் 1000 சுருட்டுக்கு கூலியாக 60 ரூபா கொடுப்பதாக சங்கத்தலைவரும், யாழ் மாநகரசபை உறுப்பினருமான திரு. செ குமாரவேலு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது; ''தொழிற் சங்கக்கிளை ஆதரித்து விளம்பரம் செய்யும் முதலாளிகள் கட்டாயம் இக்கூலியைக்கொடுக்க வேண்டும். இக் கூலியிலிருந்து குறைத்துக் கொடுத்தால் தொழிலாளர்களை ஏமாற்றியதாக முடியும்.

எமது சங்கத்தில் சேராதவர்கள் 1000சுருட்டுக்கு 85 ரூபா கூலி கொடுப்பதாக நோட்டீஸ் அடித்துவிட்டு, தயாரிப்பாளர் சங்கம் கொடுக்கும் 60 ரூபா கூலியிலும் பார்க்க குறைத்துக் கொடுக்கிறுர்கள்'' என்று அவர் கவலை தெரிவித்தார். [மா]

## ஆயுள்வேத மருந்துகள்

[சுழிபுரம்]

சுழிபுரம் கிராம உப அலுவலகம் மூலமாக நடாத்தப்படும் ஆயுள்வேத வைத்திய சாலைக்கு நீண்ட நாட்களுக்குப்பின்னர் இரண்டாயிரத்தி ஐநூறு ரூபா பெறுமதியான மருந்து வகைகள் வந்து சேர்ந்துள்ளன. இம்மருந்து வகைகள் யாவும்யாழ்ப்பாண ஆயுள்வேதக் கூட்டுத்தாபனத்தில் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இவற்றில் சில முக்கியமான மருந்து வகைகளே கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

## கூட்டுறவுகுழு சங்கங்களுக்கு நேரடிவிஜயம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கூட்டுறவு சம்மேளனதென்கிழக்காசியபிராந்திய இயககுநர் திரு. ஆர். பி. இராஜகுரு, ஸ்ரீலங்கா தேசிய கூட்டுறவுச்சபைத் தலைவர் சி. எம்.டி. போகலகம யாழ். மாவட்டத்திலுள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். தேசிய கூட்டுறவுச்சபை யாழ்.மாவட்டக் குழுத் தலைவரும் கோப்பாய் எம். பியுமான திரு. எம். ஆலாலசுந்தரம் தலைமையில் வீரசிங்கம் மண்டபத்தில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இந்த உரையாடலின்போது கூட்டுறவு ஆணையாளர்கள், மற்றும் அதிகாரிகள், ப. நோ. கூ. சங்கங்களின் தலைவர்கள், மீன்பிடி கூட்டுறவுச்சங்களின் தலைவர்கள், பனம் பொருள் கூட்டுத்தாபன தலைவர்கள் கலந்துகொண்டனர். (மா)

## வெங்காயத்தை விற்காமல் வைத்துள்ளனர்

(சுழிபுரம்)

சுழிபுரம்,பண்ணுகம் தொல்புரம ஆகிய கிராமங்களில் வெங்காயம் அறுவடை செய்தவர்கள், விற்பனை செய்யாது யாவற்றையும் கட்டித்தூக்கி பாதுகாத்து வருகின்றனர். சுமார் ஐயாயிரம் அந்தர் வெங்காயம் இப்படி வைக்கப்பட்டுள்ளது. எனக்கணக்கிடப்பட்டுள்ளது அந்தர் ஆயிரம் ரூபாவாக கொள்வனவுசெய்து நடுகை செய்யப்பட்ட வெங்காயம் விலையில் வீழ்ச்சியடைந்தால் போதிய லாபம் இல்லையென்பதால் பின்னர் விலை ஏறும் என்ற நம்பிக்கையில் விற்பனை செய்யாது வைத்துள்ளனர்.

## விளம்பர விபரம்

23-2-1982 பிற்பகல் முழங்காவில் செல்வயோக சித்திவிநாயகர் ஆலயமுன்றலில் இழுக்கப்பட்ட (அடியார்களுக்கு மட்டும்) அதிஸ்டலாபச் சீட்டிழுப்பின்

### முடிவுகள்

1-ம் பரிசு இல. 1202 · 2-ம் பரிசு இல. 1129
3-ம் பரிசு இல. 3497

மற்றும் 25 ஆறுதல் பரிசில்கள்

| | | |
|---|---|---|
| இல. 228 | இல. 25 | இல. 1185 |
| இல. 132 | இல. 1153 | இல. 742, |
| இல. 3454 | இல. 902 | இல. 1012 |
| இல. 926 | இல. 1433 | இல 1855 |
| இல. 3767 | இல. 1621 | இல. 266 |
| இல. 3275 | இல. 3267, | இல. 1563 |
| இல. 1667 | இல. 1081 | இல. 674 |
| இல. 1477 | இல. 3700 | இல. 3730 |
| இல. 1015 | | |

க. பொன்னுத்துரை,
செயலாளர்,

(2391)

கல்லூரி அதிபர் வீட்டுக்கொள்ளை:

# சுற்றவாளிகள் என்று சந்தேகநபர்கள் கூறினர்

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி அதிபர் வீட்டுக் கொள்ளை தொடர்பாக இருநபர்கள் மீது குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் தாம் சுற்றவாளிகள் எனக் கூறியதால் வழக்கு விசாரணைக்காக ஏப்ரல் 27ம் திகதிக்கு ஒத்திப் போடப்பட்டது.

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரிஅதிபர் திரு. இ. க. குலசேகரத்தின் தெல்லிப்பழை வீட்டினுள் துப்பாக்கி மற்றும் ஆயுதங்களுடன் சென்ற கொள்ளையர்கள் அதிபரையும், மனைவியையும் மிரட்டி நகை பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றிருந்தனர்.

இதுதொடர்பாக கைதாகி அடையாள அணிவகுப்பிலும் அடையாளம் காணப்பட்ட குரும்பசிட்டியைச் சேர்ந்த எஸ். ஜெயக்குமார், எஸ். விஜயகுமார் ஆகிய இருவர் மீதும சுன்னுகம் பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரத்தைத் தாக்கல் செய்தனர்.

இதையடுத்து இவர்கள் இருவரிடம் குற்றவாளிகளா? சுற்றவாளிகளா? எனக் கேட்கப்பட்டபோது; அவர்கள் 'சுற்றவாளிகள்' எனக்கூறினர். இதனையடுத்து வழக்கை விசாரிப்பதற்காக ஏப்ரல் 27 ம் திகதிக்கு நீதிபதி திரு. கி. வி. விக்னேஸ்வரன் ஒத்திவைத்தார்.

இக்கொள்ளைச் சம்பவம் தொடர்பாக மேலும் இருவர் கைதாகியிருந்தனர். நெடுந்தீவைச் சேர்ந்த க.கையிலைநாதன், எஸ். தேவதாஸ் ஆகிய இவ்விருவரையும் மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது அவர்களை விடுதலைசெய்ய பொலிசார் சம்மதம் தெரிவித்தமையால் அவர்களை நீதிபதி விடுதலை செய்தார்.

## மாநகரசபைக்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாநகரசபை முதல்வர் திரு. இராசா விசுவநாதன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கட்சி என்ற கட்டுப்பாட்டை வைத்து நிர்வாகத்தைச் சீராக்கவேண்டுமே தவிரச் சீரழிக்கக்கூடாது என்று முதல்வரைப் பார்த்து திரு. தம்புசுந்தையா கூறினர்.

அவர் மேலும் பேசுகையில், மாநகரசபைக் குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்படாததால் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்வதில் தடங்கள் ஏற்படுகிறது. குழுக்களுக்கு அதிகாரம் அளிப்பதை விரும்புகிறீர்களா இல்லையா? என்று முதல்வரைக் கேட்டார்.

இக்கட்டத்தில் ஜனாப் ஷாகுல் ஹமீட், திருவாளர்கள் எஸ். தியாகராசா, என். ரி. செல்லத்துரை, செ. குமாரவேலு, சு. சண்முகராசா ஆகியோரும் குறுக்கிட்டு, மாநகர சபை அங்கத்தவர் குழுக்களுக்கு அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று வற்புறுத்தி, அதிகாரம் வழங்கப்படாததால் எந்தவித வேலைகளும் மேற்கொள்ள முடியவில்லை என்று குற்றம் சுமத்தினர்.

சபைமுதல்வர் திரு.இராஜா விசுவநாதன், இதற்குப் பதிலளித்துப் பேசுகையில் மராமத்து, மின்சார, சுகாதாரக் குழுக்களுக்கு அதிகாரம் வழங்க தனக்கு விருப்பமென்றும், ஆனல் என்ன விதத்தில் எந்த அளவில், என்னமாதிரியான அதிகாரம் கொடுக்கலாம் என்பது குறித்து மார்ச் மாதம் 4ம் திகதி ஆலோசனைக் கூட்டத்தில் முடிவுசெய்வோம் என்றும் உறுதியளித்தார்.

திரு. எஸ். தியாகராசா ஒரு கட்டத்தில் எழுந்து, யாழ். நகர வீதிகளுக்கு நிர்ணயம் ஒன்றிருக்கிறதா? என்று கேட்டுவிட்டு, யாழ். மாநகரம் சகல நிலைகளிலும் கிராமியமட்டத்துக்கு மாறிக் கொண்டிருக்கிறது என்று குற்றம் சுமத்தினர்.

காங்கேசன்துறை வீதி, கஸ்தூரியார் வீதி நெருக்கடி நிலைக்குள்ளாகுமளவுக்குச் சென்றுகொண்டிருக்கின்றன: வில்லூன்றி மயானத்துக்கு போடப்பட்ட இரும்புக் கேற்றைக் காணவில்லை; இதற்கு ஒரு காவலாளியை நியமிக்கும்படி கேட்டேன். இதுவரை நியமிக்கப்படவில்லை' என்றும் திரு. தியாகராசா சொன்னர்.

மாநகர சபை ஆணையாளர் திரு. எஸ். சிவஞானம் இதற்குப் பதிலளிக்கையில், 'வீதி அகலம் அங்கீகாரத்துக்கு வர்த்தமானியில் பிரசுரித்த பின்னர்தான் நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும், சபையில் 33 அடி அகலத்துக்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கிறதென்றும்' சொன்னர். (மா)

## இன்று திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் அரசினர் வைத்திய சாலை ஆண்கள் வைத்திய மனநோயாளருக்கான உணவு உட்கொள்ளும் அறை திறப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் நடைபெறும்.

வைத்திய கலாநிதி செ. சு. நச்சினுர்க்கினியன் தலைமையில் யாழ். சுகாதார சேவை கண்காணிப்பாளர் வைத்திய கலாநிதி க.மாணிக்கம் மேற்படி அறையை திறந்து வைப்பார். (க)

# 'மினிவான்' பிரயாணி ஆபத்தான நிலையில்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவந்த மினிவான் ஒன்றில் பிரயாணம் செய்த அலெக்சாந்தர் என்பவர் வானிலிருந்து விழுந்ததால் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஆபத்தான நிலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அல்லைப்பிட்டியைச் சேர்ந்த வரும், வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வேலைசெய்பவருமான இவர் வேலணை வங்களாவடியிலிருந்து வானில் ஏறிவந்தபோது இவ்விபத்து சிறிது தூரத்தில் வேலணையிலேயே நிகழ்ந்துள்ளது. (வ)

## ரயில் நிலையத்தில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லானகோஷ்டி புலன்விசாரணை செல்துவருகிறது. இதுவரை சந்தேகநபர் எவரும் கைதாகவில்லை.

மட்டக்களப்பில் இருதினங்களுக்கு முன்னரும் வீடொன்றில், ஆயுதமுனையில், 37,000 ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இக்கொள்ளை பற்றியும் பொலிஸார் விசாரணைசெய்துவருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ரயில் நிலையமொன்றில் முகமூடிஇளைஞர்கள் கொள்ளையடித்தது இதுவே முதற்தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

# கொள்ளை முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள நிறுவனமொன்றின் சிகரெட் விற்பனையாளரிடமிருந்து சைக்கிளில் வந்த இரு இளைஞர்கள் துப்பாக்கியைக்காட்டி பயமுறுத்தி பணத்தை கொள்ளையடிக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி பொதுமக்களின் உதவியினுல் முறியடிக்கப்பட்டது.

இச்சம்பவம் நாச்சிமார் கோயிலடியில் நேற்று இடம்பெற்றது.

இக்கொள்ளையர்களை பொதுமக்கள் துரத்தவே, இவர்கள் சயிக்கிலையும் உரப்பையொன்றையும் றிவோல்வர் ஒன்றையும் விட்டுவிட்டு வேலி பாய்ந்து ஓடினராம்.

## துப்பாக்கி...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சன்னங்களும் பொலிஸாரினுல் கைப்பற்றப்பட்டுள்ளது.

ஓட்டுசுட்டான் பொலிஸாரின் திடீர் வேட்டையைத் தொடர்ந்து துப்பாக்கியும், சன்னங்களும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதுக்குடியிருப்பில் உள்ள திரு. எம். சிவப்பிரகாசத்திற்குச் சொந்தமான ஒரு பட்டறையிலிருந்தே மேற்படி ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. கைப்பற்றப்பட்ட பொருள்களில் .303 ரக றைபிளுக்கான 13 சன்னங்களும், .454 றிவோல்வருக்கான 2 சன்னங்களும் அடங்கும். பொலிசார் தொடர்ந்து விசாரணை செய்துவருகின்றனர்.

## மற்றுமொரு....

(1 ம பக்கத தொடர்ச்சி)

மாதந்தோறும் நிகழ்ந்துவரும் மரணங்களில் இம்மாத 'இழப்பு' இளைஞர் பஞ்சலிங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது.

இவரது மரணம் குறித்து யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். எஸ். பிரான்சிஸ் விசாரணை நடத்தினர்.

## ஆபிரிக்கா....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்த வாரத்தில் காங்கேசன்துறை துறைமுகம் மூலம் ஆபிரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட இருக்கின்றது. இதற்கான ஒப்பந்தம் நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள உப்புக்கூட்டுத்தாபன தலைமை அலுவலகத்தில் கைச்சாத்திடப்பட்டது. உப்புக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் கூட்டுத்தாபன தலைவர் திரு. எல். பி. வெரப்பிட்டியாவும் ஆபிரிக்க கம்பனியின் சார்பில் கப்பல் வர்த்தகர் திரு. க. ஜெயபாலசிங்கமும் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

ஆனையிறவு உப்பளத்தில் சுமார் இரண்டு லட்சம் தொன் உப்பு கையிருப்பில் இருப்பதாகவும் அதை வெளிநாடுகளில் விற்பனை செய்வதற்கு வியாபாரிகளை ஒழுங்கு செய்து தருமாறும் உப்புக் கூட்டுத்தாபன தலைவர் திரு. வெரப்பிட்டியா திரு. ஜெயபாலசிங்கத்திடம் வேண்டுகோள்விடுத்ததை தொடர்ந்து பங்களாதேஷ், ஆபிரிக்கா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்த திரு. ஜெயபாலசிங்கம் சுமார் முப்பதினுயிரம் தொன் உப்பு ஏற்றுமதிக்கு ஒழுங்கு செய்து நாடு திரும்பியுள்ளார்.

இந்த வருடம் கடந்த வருடங்களைவிட கூடுதலான உப்பு ஆனையிறவு உப்பளத்திலிருந்து ஏற்றுமதி செய்யக்கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக உப்புக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.


ஹோம் பிருன்ஸ் லிமிட்டெட்

உல்லாச பஸ் சேவை

கண்ணியமான, பாதுகாப்பான பஸ்சேவை

யாழ் - கொழும்பு: செவ்வாய், வியாழன், ஞாயிறு

கொழும்பு - யாழ்: திங்கள், புதன், வெள்ளி.

யாழ்ப்பாணத்தில் டிக்கட் பெறுமிடங்கள்:

(1) ஹோம் பிருன்ஸ் லிமிட்.
இல: 82, கன்ஞதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 8310

(2) யாழ். ஐக்கிய வியாபார சங்கம்
420 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன் — 370, — 438, — 537.

(3) யாழ். மெட்டல் சேல்ஸ் சென்ரர்
இல: 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 7596.

(4) குயிக் ட்ரவல்ஸ் அன்ட் டூர்ஸ்
சரஸ்வதி கார்டின்ஸ், சேர்ச்லேன், சாவகச்சேரி.
தொலைபேசி இல: 273, சாவகச்சேரி

கொழும்பில் டிக்கட் பெறும் இடங்கள்

ஹோம் பிருன்ஸ் லிமிட்டெட்
463, காலிவீதி, கொள்ளுப்பிட்டி.
தொலைபேசி இல: 89190.

ரவிந்திரா ஸ்டோர்ஸ்
285, காலி வீதி, வெள்ளவத்தை.

லங்கா பம்பே சுவீட் ஹவுஸ்,
இல. 105, ஓல்கொட் மாவத்தை, புறக்கோட்டை.
தொலைபேசி இல. 22830

ஸ்ரீ மணிமலர் ஸ்டோர்ஸ்
இல. 157/2, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு-11.
தொலைபேசி இல. 23277.

நியூ புஷ்பா ஸ்டோர்ஸ்
127, காலி வீதி, பம்பலப்பிட்டி.
தொலைபேசி இல: 88866.

கட்டணம் ரூபா 65-00



மிகவும் குறைந்த
விசேட
விமானக் கட்டணங்கள்
யாழ்ப்பாணத்தில்
மக்கிறென்ஸ் வழங்குகிறது
★ சிங்கப்பூர் கூட்டாகச் செல்வோருக்கு
(GROUP TICKETS) மிகவும் கூடியகழிவுடன்
மற்றும் ஃ மத்திய கிழக்கு ஃ லண்டன்
உலகின் எப்பாகத்துக்கும்
விரும்பிய விமானத்தில்
விமான டிக்கட்
ஃ அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரதிநிதிகளான
எம்மிடம்
வங்கியில் அறவிடும்
அதே கட்டணத்தில்
பிரயாணக் காசோலைகள்
(TRAVELLERS CHEQUES)
நாடுங்கள்
மக்கிறென்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்
8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காகயாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 603 ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982 ஆம் பெப்ரவரி மீ 26-ம் தகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as NewsPaper. The General P.O..Sri Lanka Regd. Q.B.100236/81. P.O. Box 49, Jaffna தொலைபேசி 7707, 389, 8126.